Registered as a Newspaper பக்கங்கள் 08 விலை: ரூபா 6-00

முரசம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 29 [13-08-1993] வெள்ளிக்கிழமை ஓசை 176

யோதிய நூலகம்
யாழ்ப்பாணம்
தகவல் தொழில்நுட்பம்

ஊழியர் சம்பள அதிகரிப்பு உடன் வழங்கப் பணிப்பு

மூவாயிரம்ரூபாவிற்கும் குறைவான சம்பளத்தை பெறும் அரச ஊழியருக்கான 40 சதவீத சம்பள அதிகரிப்பை ஆகஸ்ட் மாத சம்பளத்துடன் பெறவுள்ளனர். இதுதொடர்பாக பணிப்புரைகளை ஜனாதிபதி விஜேதுங்க திறைசேரிக்கு நேற்று வழங்கினார். இந்த சம்பள அதிகரிப்பு யூலைமாதம் வழங்கப்படவிருந்த போதிலும் திறைசேரி நிதிபற்றாக்குறை காரணமாக சம்பள அதிகரிப்பு அடுத்த ஆண்டு ஜனவரி முதலே வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஜனாதிபதி [8 ஆம் பக்கம் பார்க்க]

சாகும்வரை நோன்பை கைதிகள் கைவிட்டனர்

31 பெற்றோர்கள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கோரி சாகும்வரை உண்ணாவிரதமிருந்த போர்க் கைதிகள் தமது உண்ணாநோன்பைக் கைவிட்டனர். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த கைதிகளின் 31 பேர் நேற்று கப்பல்மூலம் தென்னிலங்கை திரும்பினர்.

கடந்த 15 நாட்களாக தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரி உண்ணாவிரதம் இருந்த போர்க் கைதிகள் 33பேரும் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பெற்றோரும். உறவினரும் தாம் கொழும்பு சென்று இவர்களின் விடுதலைக்கு பாடுபடுவதாகவும். அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகவும் அளித்தவாக்குறுதிகளைத் தொடர்ந்தே கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைதிகளின் உறவினர்கள் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து 'குமாரி' கப்பலில் பிற்பகல் 2.00 மணிக்கு பலாலி நோக்கி புறப்பட்டு அங்கிருந்து விசேட விமானம் மூலம் 4.00 மணிக்கு கொழும்புக்குச் சென்றனர்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் விசேட பாதுகாப்பில் துறைமுகத்திற்கு கூட்டி வரப்பட்டனர்.

பெற்றோர் உறவினர்கள் கண்ணீர் மல்கிய நிலையில் கவலையுடன் கப்பல் ஏறினர். இதேவேளை யுத்தக் கைதி ஒருவரின் உறவினரான சனித் திரா பெரேரா என்பவர் மட்டும் இங்கு தங்கியுள்ளார்.

ஐ. நா. தலையீட்டை ஜனாதிபதி நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கு நோபல் பரிசுபெற்றவர்கள் குழு ஒன்று ஐ. நா. சபை தலையிடவேண்டும் என்று சமர்ப்பித்த திட்டத்தை சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவும் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்படி குழுவிற்கு ஜனாதிபதி விஜேதுங்க எழுதிய கடிதத்தில அரசியல் தீர்வுகாண பாராளுமன்ற தெரிவுக்குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் ஐ. நா. தலையீடு அவசியமில்லை என தமது அரசு கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நோபல் பரிசு பெற்றவர்களின் சமாதான திட்டத்தை ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தமையும் இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு வெளிநாட்டு உதவியை நாடப்போவதாக முன்னர் ஜனாதிபதி விஜேதுங்க பேட்டி ஒன்றில் கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

அமைச்சரவையில் மாற்றம் ஹமீத்திற்கு வெளியுறவு

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய அமைச்சர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி விஜேதுங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்

சாகுல்ஹமீட்- வெளிவிவகார அமைச்சர், டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டாரகல்வி, உயர்கல்வி கலாசார அமைச்சர், ஹேரல்ட்ஹேரத்- நீதி அமைச்சர், எம். எல். எம். அபுசாலி- தொழில் தொழிற் பயிற்சியமைச்சர், டிரோன் பெர்னான்டோ- தகவல் ஒலிபரப்பு அமைச்சர், மகின் குணசேகர- சட்டசிறைச்சாலைகள் சீர்திருத்த கருத்திட்ட அமைச்சர், திஸ்ஸ அத்தனாயக்கா- உயர்கல்வி கருத்திட்ட அமைச்சர், மனோ ஜயரட்ன- தோட்ட சேவைகள் அமைச்சர்.

திருமதி. சுனித்திரா ரணசிங்க- கல்விச் சேவைகள் கருத்திட்ட அமைச்சர், பி. வி. கவிரட்ன- சமூக கலாசார ஒருங்கிணைப்பு அமைச்சர், பி. வி. தேவராஜ்- இந்துசமய கலாசார ராஜாங்க அமைச்சர், ஏ ஜே ரணசிங்க- தகவல் ஒலிபரப்பு ராஜாங்க அமைச்சர், எம். அஸ்வர்- முஸ்லிம் கலாசார ராஜாங்க அமைச்சர், திருமதி ராஜமனோகரி புலேந்திரன்- கல்வி ராஜாங்க அமைச்சர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் முதலாவது அமைச்சரவை மாற்றம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு பகுதி சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய சினைப்பர்தாக்குதலினால் சிப்பாய் ஒருவர் பலியானார்.

நேற்றுக்காலை 9.10 மணியளவில் ஆனையிறவில் உள்ள சுட்டதிவு கடற்கரைப் பகுதி (8ஆம் பக்கம் பார்க்க)

படகோட்டிகளின் தவறுகள் பயணிகளை பாதிக்கிறது

விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

(வடமராட்சி)

படகோட்டிகள் விடுகின்ற தவறுகளே பயணிகளை வெகுவாகப் பாதிக்கிறது இவ்வாறு கடந்த மாதம் 28 ஆம் திகதி இரவு கிளாலிக் கடல் நீரேரியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட மயில்வாகனம் - பரமேஸ்வரன் (வயது 24) துறைமுகத்தில் வைத்து வடமராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது படகோட்டிகள் எண்ணெயை மீதப்படுத்துவதற்காக நடுக்கடலில் என்ஜினை (8ஆம் பக்கம் பார்க்க)

கிளாலி கடலில் கைதான மூவர் நேற்று விடுவிப்பு

(வடமராட்சி)

கிளாலிக் கடல் நீரேரியில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் மூவர் இன்று விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி கிளாலிக் கடலூடாக பயணம் செய்த சண்டிலிப்பாயைச் சேர்ந்த மயில்வாகனம் பரமேஸ்வரன் (வயது 24) நா. நல்லையா (வயது 46) அச்சுவேலி. பருத்தித்துறை, துடவளையைச் சேர்ந்த இராமு-சிவஞானசுந்தரம் (வயது 45) ஆகியோரே நேற்று விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் 'குமாரி' கப்பல் மூலம் கூட்டி வந்தனர்.

இதேவேளை இப்படகில் பயணம் செய்த மற்றும் இரு பயணிகள் கடற்படையினரின் துப்பாக்கி சூட்டினால் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதும், இவர்களை விடுவிப்பதற்கான முயற்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் முயற்சிப்பதும் தெரிந்ததே. (யோ)

மூளாய் கடலில் கைதான இரு மீனவர்கள் விடுவிப்பு

(வடமராட்சி)

மூளாய் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இரண்டு மீனவர்கள் ஒருமாத கால இடைவெளிக்குப் பின் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

ஆனைக்கோட்டை சாவற்கட்டு பகுதியைச் சேர்ந்த நவரத்தினம்-சிவரத்தினம் (வயது 23), அரியதாஸ்-குமார் (வயது 24) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் கடந்த மாதம் 16ஆம் திகதி கைது செய்யப்பட்டு காரைநகர், பலாலி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களது வலை, வள்ளம் ஆகியவற்றை காரைநகர் கடற்படையினர் காரைநகர் முகாமில்வைத்துள்ளனர்.

மன்னார் கட்டையடம்பனில் விமானக் குண்டு வீச்சு

மன்னார் காட்டுப் பகுதியில் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான புக்காரா குண்டுவீச்சு விமானம் ஒன்று குண்டுவீச்சு தாக்குதலை மேற்கொண்டது.

நேற்றுமுன்தினம்மாலை 4.30 மணியளவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள கட்டையடம்பன் காட்டுப்பகுதியை வட்டமிட்ட புக்காரா விமானம் தொடர்ச்சியாக குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தியது.

மேற்படி குண்டுவீச்சால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

இராணுவ நிலைகள் மீது புலிகள் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஒட்டகப்புலம், காரைநகர்ப் பகுதி சிறிலங்கா இராணுவ காவலரண்கள்மீது விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கடந்த 9 ஆம் திகதி இரவு 11.15 மணியளவில் ஒட்டகப்புலம் காவலரணிலிருந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். மறுநாள் இரவு 10.15 மணியளவில் மீண்டும் அதே காவலரண் மீது புலிகள் தாக்குதலை நடத்தினர். பதிலுக்கு இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல்களின் போது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

நேற்று முன்தினம் காலை காரைநகர்ப்பகுதி காவலரண் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலை நடாத்தினர். ஆயினும் ஏற்பட்ட சேத விபரங்கள் அறியமுடியவில்லை.

பாலகனின் சடலம் மீட்பு

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி நடந்த படகு விபத்தில் பலியாகிய பாலகனின் சடலம் நேற்று காலை அல்லிப்பளை பகுதியில் கரை ஒதுங்கியது.

(8ஆம் பக்கம் பார்க்க)

கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று மட்டும் வழமையானநேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

1129 இல. தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

(சென்னை)

தமிழ்நாட்டில் இருந்துபத்து மாத இடைவெளிக்குப் பின்னர் நேற்று ஈழத்தமிழ் அகதிகளை இலங்கைக்கு கப்பல் மூலம் திருப்பியனுப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தமிழக அகதிகள் ஒருங்கிணைப்பாளர் திரு. சி. என். ராம்தாஸ் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளில் கமார் 352 குடும்பங்களைச் சேர்ந்த 1129 பேர் நேற்று சென்னையில் இருந்து "நிகோபார்" என்கின்ற கப்பலில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுடன் ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரகத்தின் பிரதிநிதிகள் தமிழக அகதிகள் ஒருங்கிணைப்பாளர் திரு சி. என். ராம்தாஸ், வெளியுறவு அமைச்சகத்தின் துணைச் (8ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

தொடர்பு கொள்ளவும்

மனையியற் கண்காட்சி எமது நிலையத்தில் நடைபெற இருப்பதனால் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவர்கள் வெகு விரைவாக வந்து எம்முடன் தொடர்பு கொள்ளவும் என்பதை அறியத் தருகின்றேன். அனிற்றா பயிற்சி நிலையம் பூநாறி மரத்தடி கொக்குவில். (சி/7179)

ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மற்றாஸ் டிக்செனறி) சிவம் இன்டஸ்ரீஸ் வெளியீடுகளும், அருள் உரை ஆகியவை. நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காந்த் புத்தகசாலை நல்லூர். (சி 7134)

பழுது பார்க்க வாங்க விற்க

வைண்டிங்கடிகாரங்கள் 90/- ஒட்டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலெக்ரோனிக் கடிகாரங்கள் 90-, 150-மேசை சுவர்மணிக்கூடுகள் 100 - 200 றேடியோமட்டும் 150- கசற் றேடியோ— 200/- இவையாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (சி7113)

வியாழ மாற்றம் பலன்கள்

ஜோஸ்யர் முத்திரை, சிறுவர்களுக்கு அறிவு நூல், கல்வியல் புலமைக்கு ஆய்வு நூல், பாமரர்களுக்கு பன்னிரண்டு இராசிகளுக்கும் பலன்கள், வியாபாரிகளுக்கு கழிவுண்டு. ஸ்ரீகாந்த்புத்தகசாலை நல்லூர்மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம். (சி-7184

இரண்டாவது பதிப்பு வெளிவராது!

இதுவரை வெளிவந்த இருபத்திரண்டு மீரா பிரசுரமான நாவல்களில் இன்னும் ''பத்து மீரா பிரசுர நாவல்கள்'' மட்டுமே விற்பனைக்குண்டு. பல்லாயிரக்கணக்கானவர்கள் படித்து மகிழும் மீரா பிரசுர நாவல்களை நீங்களும் படித்துப் பாருங்கள்! (5672)

சாண விறாட்டி

கணகணப்பூட்டும் சாண விறாட்டி ஒன்றின் விலை ரூபா 1/- மட்டுமே. ''மில்க்வைற்'' (சி-7185)

வடமராட்சியில் நீமியா உரம்

நீமியா உரம்-வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக் கொண்டது. மண்ணுக்கு வளமூட்டி பயிர்களைப் பீடைகளிலிருந்து பாதுகாத்து விளைச்சலைப் பெருக்குவது புலோலி சமநல சேவை நிலையத்தில் விற்பனையாகிறது. ஒருகிலோ பக்கற் - ரூ. 18/- மட்டுமே. மில்க்வைற. (சி-7180)

மில்க்வைற் நீல சோப், மில்க்வைற் சலவைப் பவுடர் மீண்டும் கடைகளில் கிடைக்கிறது. உள்ளூர் உற்பத்திகளைப் பாவனைக்குக் கொள்வோம். உள்ளூரில் பலநற்பணிகள் தொடர உதவுவோம். மில்க்வைற் மேலுறைகள், வெற்றுப் பக்கற்றுகள் சேகரித்து சிறந்த அன்பளிப்புகளைப் பெறுங்கள். ''மில்க்வைற்'' -உள்ளூர் உற்பத்தி.

உங்கள் கவனத்திற்கு

உள்ளூர், வெளியூர் ஜாதகம் எழுத, விவாகப பொருத்தம் பார்க்க, பிள்ளைகளுக்கு அதிர்ஷ்ட எண்களில் அழகான பெயரமைக்க, மணமகன், மணமகளைத் தேடித்தர, எதிர் காலப்பலனறிய-வேலணை சோதிடர் V. A. சிவராசா, 152 B, அரசடி றோட், கந்தர்மடம். (5673)

தவறிவிட்டது

4426801 / 83V இலக்க முடைய ஜெயரட்ணம் கருணாகரன் என்பவரின் அடையாள அட்டை 06-08-93 அன்று நுணாவிலுக்கும்யாழ்ப்பாணத்துக்கும்இடையில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் ஜெ. கருணாகரன், ''சந்திரவாசா'', துன்னாலைதெற்கு, கரவெட்டி என்ற விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும். (5681)

காணி விற்பனை

கிளிநொச்சி நகர் படித்த வாலிபர் திட்டத்தில் 750 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கிணறு மலசலகூடத்துடனான வீடும், 5 ஏக்கர் மேட்டுநிலக் காணியில் 350 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கிணறு, மலசல கூடத்துடனான வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:

பொ. சண்முகசுந்தரம்,
106—10-ம் பண்ணை,
கனகபுரம், கிளிநொச்சி.
(5668)

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் சங்க பொதுச் சபை பிரதிநிதிகளுக்கு

2ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்

29. 08. 1993

மேற்படி சங்கத்தின் 2ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 29. 08. 93 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர், திரு. த. சிவசுப்பிரமணியம் தலைமையில், தென்மராட்சி - இயற்றாலையில் உள்ள சங்க, தாவர விலங்கியல் விவசாய பண்ணையில் நடைபெறவிருக்கின்றது என்பதை தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

உபவிதி 26இல், 7-வதின் பிரகாரம் மேற்படி வருடாந்தக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணைகள் பிரேரிக்க விரும்பின் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு, அப்பிரேரணையின் பிரதியொன்றை, 24. 08 93க்கு முன்னர் சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பிட்ட பிரதி, பின்னர் கிடைக்கப்பெறின், பிரேரணைகள் நிகழ்ச்சி நிரலில் இடம் பெறமாட்டாது என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

யா.மா.பே.உ.ச மாவட்ட செயலாளர்
மாவட்ட தலைவர் ந. பாலவினாயகர்
(5669)

அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்

14- 08- 1993

அமரர்

திரு. சுப்பிரமணியம் தமீந்திரன் [ராஜன்]

[ராஜன் அரிசி ஆலை உரிமையாளர் உசன்]

தோற்றம்: 19. 01. 1958 மறைவு: 15. 07. 1993

15. 07. 1993-ல் அமரராகிவிட்ட எனது மனைவி அந்தியேட்டி கிரியைகள் 14. 08. 1993-ல் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்
''ராஜன் மில்'' குடும்பத்தினர்

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து (13-08-93)

மல்லாகத்தைச்சேர்ந்தசத்தியநாதன்—அரியமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வன் அமீரன் தனது முதலாவது பிறந்த நாளை 13-08 93 இன்று சுவிஸ்சலாந்தில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை சுவிஸில் இருக்கும் அப்பா, அம்மா, சுவிஸிலுள்ள சிவச்சித்தப்பா, ஜேர்மனியிலுள்ள யோதீஸ் சித்தப்பா, மல்லாகத்திலுள்ள அப்பப்பா, அப்பம்மா, செல்வம் அத்தை, சரோசா அத்தை, Dr நிம்மி அத்தை, லோகேஸ் அத்தை, பரமேஸ் அத்தை, சவுந்தி மாமா, சூரி மாமா, சர்மி மச்சான், சஜீபன் மச்சான், மதுர்சன் மச்சான் மற்றும் உறவினர், நண்பர்கள் சாளம்பை முருகன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

K. SATHIYANATHAN,
Holz Matt, Switzerland.
(சி-7169)

மட்கல உற்பத்தியாளர்களுக்கு

யாழ் குடாநாட்டில் இன்று எதிர்நோக்கப்பட்டு பாரிய விறகுப் பிரச்சினைகளை சமாளிக்குமுகமாக யாழ் குடாநாடெங்கும் பரவலாகவும், விரைவாகவும் இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எனவே இரட்டைச் சூட்டடுப்பு உற்பத்தியில் ஈடுபட ஆர்வமுள்ள மட்கல உற்பத்தியாளர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

சக்திப்பகுதி,
த. பொ. மே. கழகம்
காங்கேசன் துறைவீதி,
தாவடிச் சந்தி
தாவடி. (சி-7176)

நினைவு கூருகின்றோம்... 1993-08-13

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அகோரியங்களின் போது படுகொலை செய்யப்பட்ட 09 தமிழர்கள்.

1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய.

★ ஆனந்தன் (சு.சிவானந்தராசா - எல். பி 03 - கிளி வெட்டி, மூதூர்-திருமலை)

1986ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய.

பன்னீர் (இரத்தினம் பன்னீர்செல்வம் - கல்முனை-03, அம்பாறை)

1989ஆம் ஆண்டு மட்டு-மியாங்குளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய.

கேதீஸ் (கு.கிருபைராஜா- சேனைக்குடியிருப்பு-கல்முனை -மட்டு)

1990ஆம் ஆண்டு மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய.

பிரியவன் (பொன்னையா தயாளன் ஆரையம்பதி-மட்டு)

மன்னார்-மாந்தைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

ராஜன் (தொம்மை மிக்கேல் சிங்கம்-மணல்மோட்டை-மன்னார்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய.

சதீஸ் (நாகேஸ்வரன் விக்னேஸ்வரன்-353, சில்வாவீதி, வட்டக்கச்சி-கிளிநொச்சி)

தமிழீழக்கடற்பரப்பில் பயணம் செய்துகொண்டிருந்த பொதுமக்கள் படகின்மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்ட குழந்தை உட்பட 02 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

சீசர் (தர்மதாஸ் அன்ரன் ஜெகதாஸ்-வெளிச்சவீட்டுவீதி, பருத்தித்துறை)

மட்டு-கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு பொலநறுவ,வெலிக்கந்த, மயிலந்தனைப்பகுதியிலுள்ள காட்டில் சடலங்களாக மீட்கப்பட்ட 09 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி-7182)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சோமாலியாவில் வழி தவறிச் செல்லும் ஐ. நா. படைகளின் அமைதிப் பணி

பாலகுமாரன்

அமெரிக்க சனாதிபதி பில் கிளின்டனுக்கு இருக்கின்ற தொல்லைகள் போதாதென்று இப்போது சோமாலியச் சிக்கலும் சேர்ந்துள்ளது. அமெரிக்க மேலவையில் அமெரிக்க வீரர்கள் பாதுகாப்பு தொடர்பாக கிளிண்டன் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் எனக் கருதப்படுகின்றது. சோமாலியாவிலும் ஐ. நா. வின் அமைதிப்படையின் ஓரணியாக இருக்கும் அமெரிக்கப்படை இவ்வாரம் முதன் முறையாக நிலக்கண்ணி வெடித் தாக்குதலுக்கு உள்ளாக நேரிட்டு நான்கு வீரர்கள் பலியாகிவிட்டனர். மொகாதிசு, கிஸ்மாயு, பைடோவா போன்ற நகரங்களில் மட்டுமே நிலை கொண்டுள்ள இப்படையணிகள் இனிமேல் வாகன அணிகளாக செல்வதில் உள்ள அபாயங்களை - சோமாலியாவில் புதிதாக ஆரம்பித்துள்ள இக்கண்ணி வெடித் தாக்குதல் அத்தியாயம் உணர்த்தி நிற்கின்றது. இது மட்டுமன்றி கடந்த யூன் மாதம் 22ஆம் திகதி 23 பாக் வீரர்கள் சோமாலிய குழு ஒன்றினால் கொல்லப்பட்டமைக்கானபதிலடி நடவடிக்கையாக அமெரிக்கா நடாத்திய குண்டு வீச்சுக்கள் இன்று பலத்த கண்டனங்களை தோற்றுவித்துள்ளன. பொகுனியாவுக்கு ஒரு நீதி - சோமாலியாவுக்கு இன்னொரு நீதியா என்போர் ஒரு புறமிருக்க குண்டு வீச்சின் பின் விளைவுகளால் தாமே முழுமையாக பாதிக்கப்படப் போவதாக சோமாலியாவில் உள்ள மனிதாபிமான உதவி அமைப்புக்கள் தமது அச்சத்தைத் தெரிவிக்கின்றன. ஐ.நா. படையின் ஓரங்கமாக இருக்கும் இத்தாலியோ - இக்குண்டு வீச்சுக்களை உடன்நிறுத்துமாறு கோரி இவற்றால் பொதுமக்களும் வெளிநாட்டவர்களுமே அதிகம் பாதிக்கப்பட்டுளனர் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இவ்வாறான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக குற்றம் சாட்டப்படுபவர் முன்னாள் சோமாலிய இராணுவ அதிகாரியான ஜெனரல் முகம்மது பாரா அய்டீட என்பவரேயாவார். இன்றைய உலகச் செய்திகளின் நாயகனாகத் திகழும் இவர் உலக தொலைக்காட்சிகளில் தோன்றி வீர வசனங்கள் பேசி ஐ.நா. மற்றும் அமெரிக்கப படைகட்கு நாட்டை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்து தன்னையொரு மூன்றாம் உலகத் தலைவராக காட்ட முற்படுகின்றார். அதே சமயம் இன்று ஐ.நா. வினால் தேடப்படும் முக்கியமான 'பயங்கரவாதி' என இவர் மறுபக்கத்தில் காட்டப்படுகின்றார். எவ்வாறு இருந்தாலும் இவரது பழைய வரலாறு இவரது தற்போதைய நிலைக்கு பெருமைசேர்ப்பதாகஇல்லை இவர் 1969ஆம் ஆண்டு பதவிக்குவந்த மேஜர் ஜெனரல் சியாத் பாரே காலத்தில இராணுவத்தில் இருந்த போதே பாரே இவர்மீது சந்தேகம் கொண்டு சிறையில் அடைத்துள்ளார். அங்கு இவர் சில காலம் மன நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுள்ளார். பின் இவரது குழுவின் எதிர்ப்பைச் சமபாதிக்க விரும்பாத சியாத் பாரே இவரை தனது பாதுகாப்பு ஆலோசகராக நியமித்து பின் வெளி நாட்டுத் தூதுவராக அனுப்பினார். அக்கால கட்டங்களில் இவரது வர்த்தக நடவடிக்கைகளும் மற்றும் இவரது மகள் போதைப் பொருள் கடத்தியமை என பல ஊழல்களில் இவரதுபெயர் கெட்டுப்போயிற்று. பின் 1989ஆம் ஆண்டு இவர் எதியோப்பியாவிற்கு தப்பியோடி அங்கு சியாத் பாரேக்கு எதிராக செயற்பட்டார். பின் 1991ஆம்ஆண்டில் சியாத் பாரே நாட்டை விட்டோடிய பின்னர் மொகாதிசுவுக்கு வந்து சோமாலியாவிலேயே என்றும் உலகம் காணாத அழிவுகளுக்கு முக்கிய காரணமாக இருந்தார். இவரும் இன்னுமொரு குழுத் தலைவரான அலி மாதி மொகமதுவும் தமக்குள் மோதியதன் மூலம் மொகாதிசுவை தரை மட்டமாக்கி சோமாலிய மக்களில் மூன்று இலட்சம் பேர் வரை கொன்றொழித்து, 20 இலட்சம் பேர்வரை ஏதிலிகள் ஆக்கி இன்னும் அதேயளவு தொகையினரை பட்டினியின் விளிம்பில் சாவுக்குள் தள்ளி விட்டுள்ளனர். (சோமாலியாவின் சனத்தொகை 60 இலட்சத்திலிருந்து 70 இலட்சம் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது). இதன் காரணம் பற்றியே சோமாலியாவுக்கு அனுப்பப்பட்ட உணவு நிவாரணங்களையும் ஏனைய உதவிகளையும் இவர்கள் கையிலிருந்து விடுவிப்பதற்காக அங்கு UNOSOM எனப்படும் சோமாலியாவுக்கான ஐ. நா நடவடிக்கை என்ற பெயரில் படைகள்அனுப்பப்பட்டன(U. N. Operations in Somalia).

பல்வேறு இனக்குழுக்கள் [இசாக்(Issag) தாருட்(Darod) கைவையி (Hawiye) மற்றும் டிர் (Dir)] இன்று மூட்டிமோதி அழியும் சோமாலிய வரலாறு பெரும் துயரம் நிறைந்தது. 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா, இத்தாலி கையில் சிக்கி சீரழிந்தது. இவர்கள் சோமாலிய மக்களின் பெரும் பாலானவர்களை கென்யா, எதியோப்பியா போன்ற நாடுகளுடன் இணைத்துவிட்டமை பிறகாலத்தில் பெரும் துயரங்களுக்கு காரணமாகிவிட்டது. பின் 1960இல் விடுதலை பெற்ற போதும். குழப்பங்கள் தொடரவே 1969இல் சியாத் பாரே பதவிக்கு வந்து தனி மனித ஆட்சி முறையை உருவாக்கி அறிவியல் பொதுவுடமை அடிப்படையில் செயற்படவிரும்பினார். இதற்காக சோவியத் அணியின் ஆதரவைப் பெற்று சோவியத்திற்கு இப்பகுதிகளில் காலூன்ற புகழ்பெற்ற பார்பரா (Berbera) துறைமுகத்தை வழங்கினார்.

எதியோப்பியாவுடன் இருந்த ஏசுடான் பகுதியை மீட்க முயன்றார். ஆனால் 1974ஆம் ஆண்டு எதியோப்பியாவில் கேணல் மெங்குஸ்து கெய்லி மரியம் பதவிக்கு வந்த பின் சோவியத்தின் ஆதரவு அவருக்காயிற்று. அதோடு 1978ஆம் ஆண்டு எதியோப்பிய - சோமாலிய மோதலில் சோமாலியா பெரும் தோல்வியும் கண்டது. எனினும் அமெரிக்கா இவர் பக்கம் சாய்ந்தது. இவ்வாறாக கிழக்கும் மேற்கும் சோமாலியாவில் குவித்த ஆயுதங்களே இன்று முழுமையாக சோமாலியாவை அழிக்கப் பயன்படுகின்றன. தனது தேவைகள் முடிவடைய வழமைபோல 1990 அளவில் சியாத் பாரேயை அமெரிக்கா கைவிட - வேறு வழியின்றி அவர் தப்பியோட - இன்று சோமாலியா அழிவின் விளிம்பில் நிற்பது பழைய கதை.

இப்போது சோமாலியாவில் அரங்கேறும் புதியகதை இன்னும் குழப்பமானது. மனிதாபிமான உதவிகளை சீராக்கும் பணியில் ஈடுபடுவதற்காக -ஐ நா. படை அங்கு சென்ற போது நம்பிக்கை ஏற்பட்டது. அத்தோடு அங்கு தரித்து நின்ற 37,000 பலமான அமெரிக்கப்படையும், முரண்படும் இரு குழுத் தலைவர்களையும் ஒன்றாக்கி சனநாயக வழிக்கு திருப்பி சோமாலியாவை அமைதி வழியில் இட்டுச்செல்வர் என்றே நம்பப்பட்டது. ஆனால் இன்று நிலை வேறு ஐ நா. வின் அமைதிப்படை இதுவரை என்றுமே எங்குமே சந்தித்திராத ஒருபுதிய நெருக்கடி நிலைக்கு இன்று சோமாலியா முகம் கொடுக்கவேண்டியுள்ளது. முதன் முறையாக ஐ நா.யுனொசொம் ii(UNOSOMii)என்றபெயரில்அமைதியை நிலைநாட்ட ஆயுத பலத்தைப் பயன்படுத்த அதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மோதும் குழுக்களின் ஆயுதங்களை களையவும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி சோமாலியாவை ஒரு நாடாக்கி அதற்கு ஆட்சி முறையொன்றை ஏற்படுத்த வேண்டிய நிலையில் இன்று ஐ நா அங்குள்ளது. இந்த ஆணையை ஐ நா. எவ்வாறு நிறைவேற்றப் போகின்றது என்பதே இன்றைய சிக்கல் ஆகும்.

ஏனென்றால் இன்று ஏறத்தாழ 27 அமைதி நடவடிக்கைகளில் ஐ நா. ஈடுபட்டுள்ளது இவற்றில் 14, 1988ஆம் ஆண்டின் பின், அதாவது பனிப்போர் முடிவடைய மேற்கொள்ளப்பட்டவை. இன்றும் உடனடியாக 4, 5 நாடுகளில் நடவடிக்கைகளை ஐ நா மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றது. அதாவது அமைதியை நிலைநாட்ட இராணுவ வலிமையை பயன்படுத்தும்தேவை வரவர அதிகரிக்கின்றது. ஏனெனில் ஐ. நா. முதன்முறையாக 1948-ம் ஆண்டு அரபுகளுக்கும் இசுரேலியர்களுக்கும் இடையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட போது அது அனுப்பிய 224 பேரிடமும் ஆயுதம் இருக்கவில்லை. இன்று ஏறத்தாழ 75,000 ஐ.நா. வீரர்கள் (74 நாடுகளைச் சேர்ந்தவர்கள்) உலகத்தின் தொல்லைகள் மிகுந்த பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை மொத்தம் 900 பேரை ஐ.நா. பலி கொடுத்தும் உள்ளது. இன்று வெறுமனே கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கின்ற இந்திய - பாக் எல்லையில் உள்ள 38 வீரர்கள் ஒரு புறம் - அதே சமயம் சோமாலியாவில் உள்ள 16,000 கனரக ஆயுதம் தரித்த ஐ நா வீரர் எதிர்நோக்கும் சிக்கல்கள் வேறு புறமுமாக இன்று ஐ. நா. உள்ளது. சோமாலியாவைப் பொறுத்தவரையில் அங்கு இன்று அரசாங்கம் என்று ஒன்றே இல்லை. வெளி உலகோடு தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலை. சுகாதார, மருத்துவ, குடிநீர் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் எதுவும் இல்லை. இத்தகைய நிலையில் எவ்வித சருவதேச விதிகளை மதிக்க வேண்டும் என்கிற கடப்பாடு இல்லாத ஆயுதக் குழுக்களோடு மோத வேண்டிய நிலையில் ஐ. நா. உள்ளது. இதன் காரணம் பற்றியே இன்று ஐ நா.வின் அமைதிப் பணி விவாதத்திற்கும் நீண்ட ஆய்விற்கும் உட்படுத்த வேண்டிய நிலையில் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

தெளிவான கோட்பாடுகள், வித்திமுறைகள் இல்லாத நிலையில் சோமாலியாவில் ஐ. நா. வழிதவறிப் போகின்றதோ என்ற கேள்வியும் இன்று எழுப்பப்பட்டுள்ளது. அமைதியையும். இணக்கத்தையும் உருவாக்க வேண்டியிருப்பதற்குப் பதிலாக மென்மேலும் அதிகரிக்கப் போகும் வன்முறைக்கு ஐ.நா வகை செய்கின்றதோ என்ற சந்தேகமும் இன்று எழுப்பப்பட்டுள்ளது. ஐ நா விற்கு சோமாலியாவில் உள்ள இனக் குழுக்கள் பற்றிய போதிய அறிவில்லை எனக் குறையும் கூறப்படுகின்றது. "சோமாலியாவில் இப்போது ஐ. நா.வுக்கு தேவை - இப்படியான இனக் குழுத் தலைவர்களோடு ஒன்றாக இருந்து கலந்து பேசிமுடிவைக் காண்போரேயன்றி பாரிய ஆயுதங்கள் அல்ல" என்கிறார் கெனியாவில் உள்ள முன்னாள் சோமாலிய தூதுவர். ஏனென்றால் அய்டீட் போன்றோர் எத்தகையவராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க முற்படுவது பெரும் சிக்கலிலேயே போய் முடியும். ஏனென்றால் இவர்கள் எவ்வளவு மோசமானவர்களாக இருந்தாலும் இவர் சார்ந்த இனக் குழுவினர் இவருக்கே தமது முழுமையான ஆதரவை அளிப்பர் என்பதை ஐ நா. மறக்கக் கூடாது என இவர் மேலும் கூறுகிறார். அதேதோடுசோமாலியாவில் எதற்குப் பஞ்சம் இருந்தாலும் ஆயுதங்கட்கு பஞ்சம் இல்லை. பல்வேறு குழுக்கள் நகரங்களை விட்டு மறைந்து சென்று காலம் வரும் எனக் காத்திருக்கின்றனர். எனவே அய்டீட்டின் குழுவினரின் ஆயுதங்களை மட்டும் களைந்தால் பிரச்சினை தீராது. எல்லாத் தரப்பினரதும் ஆயுதங்களையும் களைய வேண்டும். இதை எவ்வாறு ஐ நா. செய்யப் போகின்றது என்பதே இன்றைய கேள்வி. ஐ நாவே இது பற்றி தெளிவாக இல்லை. இவ்வாறாக ஐ. நா. சோமாலியாவில் எதிர்நோக்கும் புதிய சூழல், புதிய வழி முறைகளை, திட்டங்களை வகுக்க வேண்டிய அவசியத்தையே இன்று உணர்த்தி நிற்பதாக கருதப்படுகின்றது.

இவை ஒரு புறமிருக்க, விரிவடையும் அமைதிப்பணிகளுக்கு ஈடுசெய்ய பெருமளவு நிதி ஐ.நாவிற்த தேவைப்படுகின்றது. ஆனால் என்றுமில்லாதவாறு பெரும் நிதி நெருக்கடியை தான் எதிர் நோக்கி இருப்பதாக ஐ.நாவின் பொதுச் செயலாளர் கூறுகிறார். அமைதிப்பணிக்காக சென்றோருக்கு தொடர்ந்து வேதனம் வழங்கவே பணமில்லை என்றும் ஏற்கனவே பலருக்கு சீராகப் பணம் வழங்கப்படவில்லை எனறும் கூறப்படுகின்றது. இதற்குக்காரணம் உலக அமைதிக்கு ஐ நா.படை பாடுபட வேண்டும் என்று கூறும் அமெரிக்கா பெருமளவு பணத்தைஐ.நாவிற்கு செலுத்தாமல் இருப்பதேயாகும். அவ்வாறே ருஷ்யாவும் செலுத்த வேண்டும் இவ்வாறு இன்னும் பல நாடுகள் தமது நிலுவையைச் செலுத்தவில்லை இவற்றைவிட ஐ நாவில் அமைதிப்பணி புரியும் படைகளிடையே பல இடங்களில் முறுகல் நிலை - யாருடைய கட்டுப்பாட்டில் பணி புரிவது என்பது தொடர்பாக ஏற்படுகின்றது. சோமாலியாவில் இத்தாலியப்படை வீரர்கள் அமெரிக்க படைத்தளபதிகளின் ஆணையை ஏற்கத் தயங்குகின்றனர்.

எனவே இவ்வாறு பல சிக்கல்கட்கும் ஐ நா.இன்று முகம் கொடுப்பதால் சோமாலியாவில் அடுத்து ஐ.நா, என்ன செய்யப்போகின்றது என்பதைப்பலரும் ஆவலுடன் எதிர் பார்க்கின்றனர். ஏனென்றால் அய்டீட்டின் ஆதரவாளர் ஒருவர் குறிப்பிட்டது போல "இங்கு ஆயுதங்கள் குவிந்து போயுள்ளன. ஆயுதங்கள் களையப்படாமல் அமைதி வராதுஎன்பது உண்மைதான். ஆனால் உலங்குவானூர்தி குண்டு வீச்சால் இதைச்சாதிக்க முடியாது பேச்சுவார்த்தை, இணக்கமான கலந்துரையாடல் மூலமே இதைச் செய்ய முடியும்." அதேசமயம் அமெரிக்காவோ தக்க பதிலடி கொடுத்து அய்டீட் போன்றோரை மடக்கிப் பிடித்து தக்க பாடம் படிப்பிப்பதன் மூலமே சோமாலியாவில் அமைதியை நிலை நாட்டலாம் என்கின்றது. எனவே இதில் எவ்வழியில் சென்று அமைதியை ஐ. நா. நிலை நாட்டப் போகின்றது என்பது நாம் காத்திருந்து காண வேண்டிய முடிவாகும். அதுவரை பட்டினியாக வாடும் சோமாலிய மக்கள் உயிர் தப்பிவாழ்வார்கள் என்பதே எமது நம்பிக்கையாகும்.

புயலாக நின்று போரிடுவோம்

மணலாற்றுப் பக்கம் வாருங்கள் – இந்த
மண்ணின் கதையைக் கேளுங்கள் (2)
தனலாக நாங்கள் எரிந்தாலும்– பெரும்
புயலாக நின்று போரிடுவோம்.
(மணலாற்று)

காலிலொரு முள்ளு தைக்கும்
கைகளிலே இரத்தம் சிந்தும்
தோழ்களிலே வலி வலிக்கும்
நெற்றியிலே வியர்வை சிந்தும்.
(மணலாற்று)

உதிக்கும் திசையினில் அண்ணனுமே
வடக்கினில் காவலாய் தம்பியுமே
இரவினில் பாலமாய் நானிருந்தேன்
இன்னலை பொறுத்திட்டே வாழ்கின்றேன்.
(மணலாற்று)

சிங்களப் படைகளின் கொட்டத்தால் – எங்கள்
நிலம் பறிபோவதுமோ – எத்தனை
காலம் நேரிடினும் எம் தலைவனின்
ஆணையில் நின்று மீழப்போம்.
(மணலாற்று)

ஜீவன்

சிறகொடிந்து

1

அன்று புதன்கிழமை. வழக்கத்திற்கு மாறாகத் தாண்டிக்குளம் தடைமுகாம் காட்சியளித்தது. நான்கு நாட்களாக இராணுவத்தினால் மறிக்கப்டிருந்த பிரயாணிகள் மீண்டும் வடபகுதிக்குள்ளேயும், வெளியேயும் செல்வதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டதால்ததமது உடைமைகளையும் சுமந்துகொண்டு, சுறுசுறுப்புடன் காணப்பட்டனர். இவற்றின் மத்தியில் இராணுவத்தினரின் மிரட்டல்கள், சீறல்கள், அடாவடித்தனங்கள். இவை இரண்டிற்கும் இடையில் கழுகுப்பார்வைகளுடன் நடமாடிக்கொண்டிருக்கும் எம்மினத்துரோகிகள். ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற பேதங்களற்ற நிலையில் தமது வாயில் வருபவற்றை எல்லாம் கேலியும், கிண்டலுமாக கொட்டிக் கொள்கின்றனர். இவர்களுள் ஒருவனாகவும் பார்வைக்கு அமைதி மிக்க ஒருவனாகவும் திகழ்கின்றவன்தான் கமலன். காலையில் இருந்து வழக்கமான வேலைகளுடன் இருந்த கமலன் தனது கைக்குக் கிடைத்த ஈழநாதம் பத்திரிகையைப் படித்ததும் செயலற்றவனாகி விடுகின்றான். கடந்த சனிக்கிழமை வெளியாகிய அந்தப் பத்திரிகையின் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த வீரவணக்கம் என்ற வாசகத்தின் கீழ் இருந்த வரி உடையிலன புகைப்படமும் அதோடு சேர்ந்தவிபரங்களுமே அவனை இவ்வாறு ஆக்கியது. அந்தப் புகைபடத்தினை நன்றாக உற்றுப்பார்க்கின்றான்.....

2

"செப்பாட்டுத்தரை" என்று எல்லோராலும் கூறப்படுகின்ற சிவந்த மண்ணையும், அந்த மண்ணுக்குப் பயன்தரும் வகையில் செழித்துஓங்கி வளர்ந்திருக்கும் வாழை மரங்கள், பூக்களோடும், காய்களோடும் நிமிர்ந்து நிற்கும் மிளகாய் செடிகள், மண்ணுக்குள் புதைந்தவண்ணம் பசுமையை வெளிக்காட்டும் வெங்காயம், இவற்றே டுபோட்டிபோடும் புகையிலை, குரக்கன் பயிர்கள். அதி தனை பசுமைகளும் நிறைந்த கிராமம்தான் வடக்கு நீர் வேலி. குடும்பங்களுக்கிடையில் ஏதாவது சிறிய சச்சரவுகள் ஏற்பட்டாலும் அது அண்ணன் தம்பி குடும்பங்களிற்குள் நடப்பதுபோலவே இருக்கும். இபபடியான இரு குடும்பங்களில் ஒரே ஆண்டில் பிறந்தவர்களே கமலேஸ்வரனும்சிறிகாந்தனும்.

ஒன்றாகவே கல்வி கற்று, விளையாடி, தெருக்களில் சுற்றித்திரிந்து, கிராமத்தில் இவர்களுக்கு ஏற்படும் சகல பிரச்சினைகளுக்கும் ஒன்றாகவே முகம் கொடுத்து எதையும் இருவருமே ஏகமனதாக முடிவெடுக்கும் உள்ளத்தோடு வாழ்ந்தவர்கள். க.பொ.த. சாதாரணதரப் பரீடசை முடிவுகள் வெளியாகியது. சிறிகாந்தன் உயர்வகுப்பில் கணதப் பிரிவில் கற்பதற்கான் தகுதி பெற்றிருந்தான். கமலேஸ்வரனோ கலைப் பிரிவிற்தான் கற்கத் தகுதி பெற்றிருந்தான். இது இவர்கள் இருவருக்கும் மிகவும் ஏமாற்றத்தையும், மனஅமைதியின்மையையும் ஏற்படுத்தியது. இதுவரை காலமும் ஒரே வகுப்பில.. இனியரும் காலங்களில வெவ்வேறு வகுப்புக்களிலா ?

சிறிகாந்தன் ஒரு முடிவுக்கு வருகிறான்.

"மச்சான் நீ மெட்ஸ் படிக்கலாது. ஆனா நான் ஆட்ஸ் படிக்கலாம்தானே. ரெண்டு பருபம் ஆட்ஸே படிப்பமடா".

"நீயாவது இன்ஜினியராவனடா".

நீண்ட விவாதத்தின் பின்னர் இருவரும் ஒரே முடிவை எடுக்கின்றனர். மீண்டும் அதே பாடசாலையில் ஒரே வகுப்பில்-ஆனால் உயர்வகுப்பில்-அவர்களின் கல்வி தொடர்கின்றது.

★ ★

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் அரக்கப் படையாக மாறிக் கொண்டு இருந்த காலம். பாடசாலைகள் சீராக இயங்காத நிலை. வாகனப் போக்குவரத்துகள் ஒழுங்கற்ற தன்மை வீடுகளில் இளைஞர்களோ, யுவதிகளோ நிம்மதியாக உறங்க முடியாத அவலம். தெருக்களில் மாணவர்களோ, வியாபாரிகளோ நடமாட முடியாத பயங்கரம் இத்நிலைக்கு சிறிகந்தனும், கமலேஸ்வரனும் விதிவிலக்காகவில்லை.

"மச்சான் இண்டைக்கு இரவைக்கு ஏழரைபோல அந்த அண்ணை வரணெண்டனர். நீ என்ன மாதிரி?" என்று கூறியவாறு கமலேஸ்வரனின் முகத்தை நன்றாக உற்றுப் பார்க்கிறான்.

"மச்சான் உனக்குத் தெரியும்தானே அம்மாவின்நிலை. எண்பத்தி மூண்டிலை கடையோட சேத்து மாமாவைக் கொளுத்தினதோட மனுசிக்குப் பிடிச்ச ஏக்கம் இன்னும் நீரவில்லை. அதில இருந்து ஒரே வருத்தம். இந்த நிலையில நானும்... நீ போ மச்சான். நான் பிறகு பார்த்து வாறன்". இருவருக்கும் இடையில் வழக்கமான விவாதம். வழக்கமான ஏகமனம்; ஆனால் மாறுபட்டது. குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு இருவரும் செல்கின்றனர். குறிபபிட்ட அண்ணை வந்தார்.

"தம்பி சுணங்கேலாது. அவன்கள் இந்தப் பக்கம் வர முதல் நாங்கள் போயிட வேணும்."

"சரி மச்சான் நான்போட்டு வாறன். நீ கவனம்".

"ஓம்..... மச்சான்" இருவரும் விடைபெற்றனர். ஒருபக்கம் சிங்களவனின் அபகரிப்பு. மறுபக்கம் இந்தியனின் ஆக்கிரமிப்பு. இவற்றிலிருந்து மண்ணை மீட்டெடுக்கும் தாகத்தோடு சிறிகாந்தன் மிக உற்சாகமாக நடந்து சென்றான். மிகவும் சோர்வுற்ற நிலையில் கமலேஸ் வரன் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்படுகின்றான்.

★

அனியாயக்காரர்களின் அட்டூழியங்கள் முடிவுறற காலம் அது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மக்கள் மத்தியில் ஒரே விதமான குதூகலம். திரும்பும் பக்கங்களிலெல்லாம் வண்ணத்துப்பூச்சிகளாக விடுதலைப புலிகள். அவர்களிலொருவனாக கஜன் என்ற பெயரில சிறிகாந்தன் நேராக கமலேஸ்வரனின் வீட்டுக்குச் செல்கிறான். இயற்கையில் சோர்வாகக் காணப்பட்ட சிறிகாந்தன், திடமான இளைஞனாக வாசலில் நிற்கின்றான். இதற்கு மாறாக சோர்ந்த வண்ணம் படுக்கையை விட்டு எழுந்து வந்தான் கமலேஸ்வரன். ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்கின்றனர்

"நீ பிடிபடு கே.கே எஸ்ஸில இருக்கிறாய் எண்டத நான் காட்டுக்கையே அறிஞ்சனான் மச்சான்"

"நீ இடைக்கிடை இஞ்சாலப்பக்கம் வந்து போனனியோடா.."

"ஓம் மச்சான் உன்ர வீட்டையோ என்ர வீட்டையோ பேர்கேலாத நிலை... தெரியும்தானே;மற்றவங்களும் நிண்டவங்கள்..."

இருவரும் நீண்ட நேரமாக உரையாடி விட்டு, ஒன்றாகச் சாப்பிட்டு விட்டு விடைபெற்றனர்

மீண்டும் சிறிலங்கா அரசினால் திட்டமிடப்பட்டு. இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர் தமிழீழ மக்கள். திரும்பும் இடமெல்லாம் இடிந்துவீழ்ந்துகொண்டிருக்கும் வீடுகளும், கட்டடங்களும் அவற்றின் இடிபாடுகளுக்கிடையில் மனித உடல்களின்கூறுகள். பிணம்தின்னும் பறவைகள் வட்டமிடும் மயானமாகக் காட்சியளித்தது யாழ். குடாநாடு கோட்டைச் சமரில் காயப்பட்ட சிறிகாந்

> "மச்சான் சந்தோஷமாப் போட்டுவா. மச்சான் நீ வெளிநாட்டில இருந்து திரும்பி இங்க வரைக்க, நான், இருக்கிறனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும். போட்டு வா.."

தன் மந்திரகை வைத்தியசாலையில் செய்கை பெற்றுக்கொண்டிருந்தான் அவனைப் பார்வையிட வந்திருந்த கமலேஸ்வரன் அருகில் நின்றான்.

"எனக்கொண்டும் பெரிய காயமில்லை. நீ ஏன் யோசிக்கிறா மச்சான்?"

"அதுக்கில்லையடா, நாளைக்கு நான் கொழும்புக்குப் போறன்."

"அங்கபோய் என்ன செய்யப்போறாய்...?"

"வெளிநாடுபோப் போறன்..."

அரைமணி நேர உரையாடலின் பின்னர் கமலேஸ்வரன் விடைபெறுகிறான்.

"மச்சான் சந்தோசமாப் போட்டுவா.மச்சான் நீ வெளிநாட்டில இருந்து திரும்பிவுக்க வரைக்க நான் இருக்கிறனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும்போட்டுவா..."

★ ★

வெளிநாடு செல்வதற்காக கொழும்பு நகர் சென்ற கமலேஸ்வரன் தனக்குப் பயண ஏற்பாடுகளைச் செய்யும் வெளிநாட்டு முகவர் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட வீடுதியில் தங்கிக்கொள்கின்றான். அதே விடுதியில் பக்கத்து அறையில் சில தமிழ் இளைஞர்கள், அந்த அறைக்குள் இரவும் பகலும் ஒரேமாதிரி ஆரம்பத்தில் அவர்களைப் பற்றிப் புரிந்து கொள்ளாத கமலேஸ்வரன் காலப்போக்கில் அறிந்துகொள்கின்றான். தமிழினத்தினை அழிபபதற்காக சிங்கள எதிரியானவன் பயன்படுத்தும் கைக்கூலிகள் அவர்கள் என்பதைச் சந்தேகமின்றி தெளிவுபடுத்திக்கொள்கின்றான். எனினும் அவர்களின் நண்பனாகக் கமலேஸ்வரனும், கமலேஸ்வரனின் நண்பர்களாக அவர்களும் மாறுகின்றனர். இவ்வாறான உறவு மலர்ந்ததற்கான ஆரம்ப பக்காரணம் அவர்களின் உல்லாச வாழ்க்கை அவனைக் கவர்ந்ததும், அவனிடம் சிறிதளவு தொகைப் பணம் உண்டு என்பதை அவர்கள் தெரிந்து கொண்டதுமே. இடையிடையே அவர்களுக்குப் பணக் கஷ்டம் வருவதுண்டு. அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தன் நண்பர்களிடம் கமலேஸ்வரன்.

"என்ர ஏஜென்சிக்காரன் சுத்துறான். இண்டைக்கு ஆளைத்தூக்கி காசு பறிப்போம்....."

"இப்பவே முடிப்போம்அலுவலை"

ஒருமித்த பலகுரல்கள் உற்சாகமாய்.

கமலேஸ்வரனின் ஏஜென்சியிடமிருந்து ஏற்கனவே கொடுத்த பணத்தோடு மேலதிகமாகவும் பறிக்கப்பட்ட பணம் சில நாடகளிலேயே செலவாகிவிட்ட நிலையில் எல்லோரும் ஒன்றாக வட்டமாக அமர்ந்து கொண்டு ஒரு ஆழ்ந்த திட்டத்தினைப் போடுகின்றனர். அவர்களில் ஒருவனும். அந்தக் குழுவிற்குத் தலைவனுமான, கமலேஸ்வரனைப் பார்த்து ... ...

"லொட்ஜுகளில் இருக்கிற எங்கட சனங்களில எல்லாரி ஆதாரவாளர்கள உன்னால அடையாளம் காட்ட முடியுமோ?"

"ஏன் அவன்கள ஆமிபிட்ட காட்டி கொடுத்துட்டு காசு வாங்கிறத்துக்கோ?"

"அவன் தாற காசு எந்த மூலைக்கடா காணும்.....? நாங்களே ஆக்கள தூக்கிட்டு அவையின்ர வெயிற்றைப் பார்த்து காசு பறிப்போம்".

"மணி ஐடியா மச்சான். நானும் ஒருக்கா பேசிச்சனான். எனக்கு கனக்க பேரைத்தெரியும் இண்டைக்கே தொழிலைத் தொடங்குவோம்—"

அவர்களின் அம்முயற்சி வெற்றியளிக்கின்றது. கொழும்பு நகரில் உள்ள தமிழர்கள் அதிகமாகத் தங்கும் ஏதாவது ஒரு விடுதிக்குச் செல்வார்கள்.

நாடு நிச்சயம்

ரகுராம்

அந்த உறைவிடம் தேடிநின்ற தமிழீழத் தமிழர்களில் கமலேஸ்வரனினால இனம் காட்டப்படுபவர்கள் அழைத்துச் செல்லப்படுவர்.. அடி, உதை மிரட்டல்... விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் அல்லது ஆதரவாளர்கள் என்ற முத்திரை பதித்தல்... ஒவ்வொருவனும் பொருளாதார வசதிக்கேற்ப பணம் அறவிடப்பட்டு...விடுதலை...? இவ்வாறு தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கையில் தான் திடீரென ஒருநாள் சிறிலங்காவின் காவற்துறையினரின் சுற்றிவளைப்பிற்குள் அகப்பட்ட அவ்வீளைஞர்கள் கைது செய்யப்பட்டு கூண்டினுள் அடைத்து வைக்கப்படுகின்றனர். இக்கூண்டினுள் வேறும் பல இளைஞர்களும், நடுத்தர வயதினரும் இருந்தனர் மறுநாள் காலை இவர்களின் இடததிற்கு ஒருகாவற்துறை அதிகாரியுடன் வந்த தமிழ் ஆசாமி குறிப்பிட்ட சிலரைக் காட்டி கூண்டை விட்டு வெளியேற்றினார். கமலேஸ்வரன் கூண்டின் உள்ளேயே இருந்தான். கூண்டு வாசல் கதவு பூட்டப்படுமபோது கமலேஸ்வரனின் நண்பர்களில் ஒருவன் "அவரும் எங்கட ஆள்தான்" என்று கமலேஸ் வரனைச் சுட்டிக்காட்டிக் கொண்டு தமிழ் ஆசாமியின் முகத்தைப் பார்த்தான் தமிழ் ஆசாமி தன் முகத்தைத் திருப்பி காவல்துறை அதிகாரியைப் பார்த்துச் சிரித்தார், கமலேஸ்வரனும் கூண்டிலிருந்து விடுதலையானான். விடுதலையானவர்கள் ஒரு 'கையேஸ்' வானில் ஏற்றப்பட்டு ஒரு வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருமிடுக்கோடு நின்ற பிறிதொரு ஆசாமி பேசுகின்றார்:

"தோழர்களே, இங்குள்ள பிரச்சினைகள் உங்களுக்குத் தெரியும்தானே. நீங்கள் வவுனியாவுக்குப்போய் அங்க ஆமியோட நிக்கிற எங்கட மற்ற தோழர்களோட சேர்ந்து நில்லுங்கோ. நாளைக்குக் காலம்பிற போற ரெயினிலேயே எல்லோரும் போங்க.."

எல்லோரும் ஒருவரோடு ஒருவர் பார்த்துவிட்டு சம்மதத்திற்கு அறிகுறியாக மௌனமாக நிற்கின்றனர். மறுநாள் காலையில் அனைவரும் வவுனியா வருகின்றனர். கமலேஸ்வரன் கமலன் என்ற பெயர் உள்ளவனாக மாறுகின்றான். வடபகுதிக்குள் இருந்து வவுனியா நகரத்திற்குச் செல்லும் மக்களில் தனக்குத் தெரிந்த வெளிப்படையான போராட்ட உணர்வுள்ள மக்களைக் காட்டிக் கொடுப்பதே டு, ஏனைய மக்களோடு சாதாரணமாக உரையாடி, அவ்வுரையாடலில் இருந்து தொச்சிமோட்டையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் பற்றிய தகவல்களைத் திரட்டி இராணுவத்திற்குக் கொடுக்கும் பணியை முழுமனதோடு செய்துகொண்டிருந்தான்.

3

"டேய் கமலன், உன்ர ஆள் அங்கவந்து நிக்குது. நீ என்னடா இஞ்ச யோசிச்சுக் கொண்டு இருக்கிறா?" என்ற குரல் கேட்டு சுயநினைவிற்கு வந்த கமலேஸ்வரன் "அந்த ஆளைப் போகச் சொல்லு மச்சான். நான் பிறகு சந்திக்கிறன்" எனக் கூறிவிட்டு மீண்டும் அப்படத்தைப்பார்க்கிறான்.அதன் கீழ் உள்ள வரிகளைப் பார்க்கின்றான். "நேற்றைய தினம் நெச்சிமோட்டை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடனும். தேசவிரோதக்கும்பல்களுடனும் எதிர்த்து நின்று சமர்புரிந்தபோது வீரமரணமடைந்த இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிகின்றனர்".

"மச்சான் நீவெளிநாட்டில இருந்து திரும்பிவரேக்க நான் இருக்கின்றேனோ இல்லையோ இந்த நாடு நிச்சயம் இருக்கும்" சிறிகாந்தன் கூறிய அந்தவார்த்தைகளை நினைத்துக்கொள்கின்றான. எண்பத்தி மூன்றில் கொழும்பில் நடந்த இனக்கலவரத்தில் எரிக்கப்பட்ட தனது தாய் மாமாவின் மரணச்செய்தியை அறிந்தவுடன் இருந்தது போன்ற மனநிலை...அனைத்திலுமிருந்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டவனாக எழுந்து தன் வழக்கமான கடமைக்காகச்செல்கின்றான். அவனுக்காக அங்கு சிலர் காவல நின்றனர்.

மீனுக்கு சத்துணவு

ஜெர்மனிய விஞ்ஞானிகள் செயறகைமுறையில் மீன்களுக்கு போசதல் மூலம் சதுணவு ஊட்டி அவற்றைப் பருமனாக்கி சுவையுள்ளதாக்கவும் முடியுமெனக் கண்டுபிடித்துள்ளனர் 20-30டிகிரி வரைக்குள் எருக்கும் நீரில் இவ்வாறு போத்தலில உணவருந்தி வளரும் மீன்கள் ஒவ்வொன்றும் 18மாதத்தில்7கிலோ 130 கிராம் எடையை அடைகின்றன.

தமிழீழ மக்களுக்கு ஒரு புதிய நீதி நிர்வாக அமைப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ மக்களுக்கென ஒரு புதிய நீதி நிர்வாக அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதுஒருஅத்தியாவசிய தேவையாக இருந்தது. போத்துக்கீசர் ஆட்சிக்கு தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாக உட்படுத்தப்படுமுன்னர், தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சமா-தானமாகவும் வாழ்ந்து வந்தனர். அதே போல் தமிழ் மக்கள் தமது சொந்த தாயகத்தில் தம்மையே தாம் ஆண்டு கொண்டு சமா-தானமாயும், சுதந்திரமாகவும் வாழும் உரிமையை சிறிலங்கா அரசு ஏறிக மறுத்தபோது தமிழ் மக்கள் சமாதானமான, அகிம்சை முறையிலான போராட்டங்களை மேற்கொண்டனர். இலங்கையில் இருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறிய பின்னர் மாறி. மாறி ஆட்சிபீடத்திற்கு வந்த பௌத்த சிங்கள இனவாதஅரசாங்கங்கள் தமிழ் மக்களின்சமாதானமானஅகிம்சைமுறையிலான போராட்டங்களுக்கு மதிப்புக் கொடுக்காதுவன்முறையில் ஈடுபட்டு தமிழ் மக்களை அழித்துஒழிக்கும்நடவடிக்கையில் ஈடுபட்ட தன்காரணத்தால்ஆயுதம் ஏந்திப்போராடவேண்டியநிர்ப்பந்ததிற்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டார்கள். தமிழ் ஈழத்தில் உள்ள சிங்கள காவல்துறை, இராணுவம், அரச இயந்திரம் முற்றாக செயலிழக்கச் செய்யப்பட்டன. இதன் காரணமாக சிறிலங்கா அரசு தமிழ் மக்களை அழிப்பதற்கென்றே தமிழீழத்திற்கு எதிரான ஒரு யுத்ததை பிரகடனப்படுத்தியது சிங்கள அரசின் சிவில் நிர்வாகம் நிலை குலைந்தது. தமிழ் மக்களின் சார்பில் இப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற விடுதலைப்புலிகள் மக்களின் அன்றாட தேவைகளுக்கான மாற்று ஒழுங்குகளையும் புதிய வழிமுறைகளையும் செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்ததிற்கு உள்ளானார்கள்.

சட்டக் கல்லூரி

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் தமது அமைப்புக்களின் ஊடாக நீதி வழங்கினர் ஆனால் அது முற்றுமுழுதான வகையில் தேவையைப் பூர்த்தி செய்யவில்லை. அதன்பின்னர் அவர்கள் தமக்கென ஒரு காவல்துறையை உருவாக்கினர். அவர்கள்சட்டத்தையும், ஒழுங்கையும் நிர்வகித்து வருகினறனர். தமது இராணுவ வெற்றிகளின் மூலம் தமிழ் மக்களுக்கு விடுதலைப் புலிகள் ஒரு இயல்பு நிலையை பெற்றுக் கொடுத்தனர். இவ் வேளையில் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கும் குற்றச் செயல்களை தடுப்பதற்கும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நீதி நிர்வாக அமைப்பு ஒன்று உருவாக வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனை கருத்தில் கொண்டு தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு தனியான நீதித் துறையையும், சட்டக்கல்லூரி ஒன்றையும் நிறுவினார். தமிழீழ சட்டக் கல்லூரி ஆண்களையும்,பெண்களையும் உள்ளடக்கிய சுமார் நாற்பது (40) மாணவர்களுடன் இயங்கத்தொடங்கியது. சட்டத்திலும், வேறு துறைகளிலும் துறைசார்ந்த அறிஞர்களால் மாணவர்கள் போராட்ட சூழ்நிலைகள் மத்தியிலும் பயிற்றுவிக்கப்பட்டனர். இப்போது இம்மாணவர்கள் பரீட்சையில் சித்தியெய்தி சத்தியப்பிரமாணமும் எடுத்துவிட்டனர்.

மேன்முறையீடு

தமிழீழ நீதித்துறை தமிழீழத்தின் வெவ்வேறு பகுதிகளில் குடியியல், குற்றவியல் பிணக்குகளை விசாரணை செய்து நீதி வழங்குவதற்காக தமிழீழ நீதிமன்றுகளைத் திறப்பதற்குத் தீர்மானித்துள்ளனர். பாதிக்கப்பட்டோருக்கு விரைவாகவும், தீர்க்கமானதுமான நீதியைக் குறைந்த செலவில் வழங்குவதே இத் நீதிமன்றுகளின் நோக்கமாகும். இந் நீதிமன்றங்கள் வெளித்தலையீடுகளுக்கு அப்பால் சுதந்திரமாகவும் இயங்கி அதன் தனித்துவத்தையும், புரட்சிகரத் தன்மையையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் விதத்தில் இயங்கும். இவற்றை விட மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஒரு மேல்விசாரணை அமைப்பும் நீதி நிர்வாக குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. மேல்விசாரணை மன்றின் தீர்ப்பே தமிழீழத்தில் இறுதியானதுமாக விளங்கும். தேசியத் தலைவரினால் காலத்திற்குக் காலம் பிரகடனப்படுத்தப்படும் சட்டங்களையும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறையிலான நீதியும் ஒப்பரவுமான முறையில் நீதி பரிபாலனம் செயற்படும். இந்நீதி மன்ற அமைப்புகளில் ஒரு விசேட அம்சம் யாதெனில் ஒரு வைத்திய கலாநிதி. சட்ட அறிஞர், பொறியியலாளர், நில அளவையாளர், சமூகத்தில் பெரும் மதிப்புமிக்க அறிஞர்கள் போன்றவர்கள் கொண்ட நிபுணர் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது, இக்குழுவின் ஆலோசனைகளைக் கட்சிக்காரர் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். நீதியாளர்களும் ஆலோசனைகளை இவர்களிடமிருந்து பெறலாம்.

தமிழீழத்தில் தற்போது வாழும் சகல சட்டத்தரணிகளும், தமிழீழ சட்டக்கல்லூரியில் பயின்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட சட்ட அறிஞர்களுடன் சேர்ந்து தமிழீழ நீதிமன்றுகளில் கட்சிக்காரர்களின் சார்பில் தோன்றலாம். இந்த விடயத்தில் ஒரு விசேட அம்சம் என்னவெனில் சட்டத்தரணிகளின் கொடுப்பனவுகள் ஒரு படிமுறை அடிப்படையில் கட்சிக்காரர்களால் நீதிமன்றில் கட்டப்படும், அதன்பிறகுதான் அப்பணம் சட்டத்தரணிகளுக்கு வழங்கப்படும். வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் ஏழைகளாக இருந்தால் இலவசமான சட்ட உதவித் திட்டம் ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தனிநபர்கள் பிறருக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்யவும் தமக்கெதிராக வைக்கப்பட்ட வழக்குகளில் தாமே தம் சார்பில் தோன்றி வாதிட்டு வழக்காட உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சட்டக் கோப்புக்கள்

நாட்டின் சட்டங்கள் சீர் அமைக்கப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்படும் தறுவாயில் உள்ளன. திருத்திய தேசவழமைக் கோவை, இன்றைய சமூகத்துக்கு ஏற்ப திருத்தப்பட்ட தண்டனைக் கோவை, கோயில் காணிகள் பற்றிய நம்பிக்கைச் சட்டம் போன்றவை எல்லாம் வெளியிடப்படும்தறுவாயில் உள்ளன. பிரபலசட்ட அறிஞர்களும், சட்டத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களாலும் இக்கோவைகள் தயாரிக்கப்பட்டு தேசியத் தலைவரின் அனுமதியின் பின் வெளி வர இருக்கின்றன.

குற்றவியல் வழக்குகளில் தமிழீழ காவல்துறையினர் வழக்குகளை நெறிப்படுத்துவர் தேவையேற்படும் பட்சங்களில் அவர்களுக்கு சட்ட அறிஞர்களின் உதவியும் கிடைக்கும் தமிழீழ காவல்துறையினரும் புதிய நீதிமன்ற அமைப்பும் ஒருங்கிணைந்து செயற்படும். குற்றவியல் குற்றச்சாட்டு தொடர்பாக தமிழீழ காவல்துறையால் கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் காவல்துறையின் ஆரம்ப விசாரணையின் பின்னர் அப் பிணக்கை சமரசமாக தீர்த்து வைக்க முடியாதவிடத்து அண்மையில் உள்ள நீதிமன்றின் முன் நிறுத்தப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் ஒரு சந்தேக நபரைத் தொடர்ந்து 48 மணித்தியாலத்திற்கு மேலாக காவல் நிலையத்தில் தடுத்து வைக்க முடியாது.

தொழில் பிணக்குகள்.

தமிழீழ நீதித்துறை குடும்ப நீதிமன்றங்களையும் விரைவில் ஆரம்பிக்க உள்ளது தனித்துவமான தொழில் நீதிமன்றங்கள் அமைக்கும் வரை தொழிலாளர்களின் பிணக்குகள் சம்பந்தமான விடயங்களும் தமிழீழ நீதிமன்றங்களில் நடைபெறும். சட்டப்படியான கொடுப்பனவுகள் பற்றி விசாரிக்கவும் நீதிவழங்கவும் தொழில் நீதிமன்றங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. வேலையில் இருந்து நீக்கப்பட்ட ஒருவர் தான் வேலையில் இருந்து நீக்கப்பட்டு ஆறு (6) மாத காலத்திற்கு இடையில் தொழில் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் நாட்டு நிலைமைகளினால் முறையான மன்றுகள் இல்லாத காரணத்தினால் விண்ணப்பிக்கமுடியாது இருந்தவர்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்று இயங்கத் தொடங்கி ஒரு மாத காலத்திற்குள் தமது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளலாம் என்ற சலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

கை நூல்

புதிய நீதிமன்ற அமைப்புக்கள் ஆரம்பிக்க இருப்பதோடு தொடர்பாக "தமிழீழ சட்டக்

ச. தியாகராசா

கோவை" எனும் ஒரு கைநூல் வெளிக்கொணடு வரப்பட்டுள்ளது. அது மக்களுக்கு விற்பனைக்கும் விடப்படும். குற்றங்களும் அவற்றிற்கான தண்டனைகளும் இதில் விபரிக்கப்பட்டுள்ளன. வீதி ஒழுங்குகள் மீறல்களுக்கும் அவற்றிற்கு ஏற்ப தண்டனைகளும் ஒரு தனி அத்தியாயமாக காட்டப்பட்டுள்ளது. வீட்டு வாடகை, அதிலிருந்து வெளியேற்றம், காணிப்பிரிவிடுதல்கள், கடன்களை மீளப் பெறுவதற்கான ஒழுங்கு விதிகளும் இப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையில் இப்புத்தகம் சட்டத்தரணிகளுக்கும், நீதியாளர்களுக்கும் மிகவும் உதவும் முகமாக வெளிக் கொண்டுவரப்பட்டுள்ளது.

பாம்புகளும் - பாம்புக்கடியும்

வீட்டிலோ, வீதியிலோ அல்லது தோட்டப் பகுதிகளிலோ ஒருவர் திடீரென பாம்புக் கடிக்கு ஆளாகும் போது மக்களில் பலர் உடனடியாக என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கின்றனர். எனவே சாதாரண மக்கள் அனைவரும் இப்படியான வேளைகளில் எப்படி செயற்படவேண்டும் என்பதை தெரிந்து கொள்வதால் பிறருக்கு உதவுவதுடன் வேண்டிய சந்தர்ப்பங்களில் தனக்கும், தனது குடும்பத்திற்கும் உதவலாம்

இலங்கையில் பலவகையான பாம்புகள் காணப்படுகின்றன. ஒரு நாளைக்கு இருவர் வீதம் பாம்புக்கடியினால் இறக்கின்றனர். பாம்புக்கடியினால் கணிசமான மக்கள் இறப்பதற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெறாததே காரணமாகும். தற்போது பாதுகாப்பான சக்திவாய்ந்த மருந்து வைத்தியசாலைகளில் கிடைக்கின்றன. எனவே முதலுதவியின் பின்பு, நோயாளியை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிப்பதன் மூலம் வீணான இறப்புக்களை மக்கள் தவிர்த்துக் கொள்ளலாம்.

பாம்புகளை3 வகைகளாகப் பிரிக்கலாம்:

(1) நிலம் வாழ் பாம்புகள்
(2) கடல் வாழ் பாம்புகள்
(3) நச்சுத்தன்மையற்ற பாம்புகள்.

1) நிலம் வாழ் பாம்புகள்:

இலங்கையில் காணப்படும் 89 வகை நிலப்பாம்புகளில் 10 வகை மட்டுமே நச்சுத்தன்மையுடையன.

2) கடல் வாழ் பாம்புகள்:-

உலகத்தில் நாம் அறியகூடியதாக 52 வகையான கடல் வாழ் பாம்புகள் உள்ளன. இதில் 13 வகைகள் இலங்கையில் காணப்படுகின்றன. இவை அனைத்துமே மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்தவை.

இவற்றுள் நீர் கோவை (Beaked Sea Snake) மன்னார் குடாக்கடலில் காணபபடுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் கடற்பாம்புக் கடிக்குட்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

3) நச்சுத்தன்மையற்றவை:-

மலைப்பாம்பு, சாரைப் பாம்பு முதலியன. மலைப் பாம்பு இரு சிறுவர்களை முழுமையாக விழுங்குமளவிற்கு பெரிய பாம்பு.

நச்சுப்பாம்புகளால் ஏற்படுத்தப்படும் கடி:-

நச்சுபபாமபுகள் ஒரு சோடி நச்சுப்பற்களை கொண்டுள்ளதால் இவற்றால்தீண்டப்படின் இரண்டு வட்டவடிவமான பற்குறிகளை கடிபட்ட இடத்தில் ஏற்படுத்தும்.

குணம் குறிகள்:-

கடியுண்ட இடத்தில் கடித்து 15-30 நிமிடங்களில் வலி ஏற்படும் சிறிது நேரத்தில் வீக்கம் ஏற்படலாம். வீக்கம்எவ்வளவு நஞ்சு உள்ளே செலுத்தப்பட்டுள்ளது என்பதில் தங்கியுள்ளதுபுடையன்கடியில் வலியும், வீக்கமும் அதிகமாகும். இரத்தப் பெருக்கும் ஏற்படும் இதுவும் அதிகமாக புடையன் கடியில் காணப்படும் கடித்த இடத்தோலில் நிறமாற்றம், கிருமித்தொற்று என்பன ஏற்படும்.பொதுவான குணம் குறிகளாக, கடித்து 15 நிமிடம் முதல் 1 மணிவரை நாகபாம்பு, எடடடிவிரியன், வரிப்புடையன்கடிப்பின் நரம்புத் தொகுதியைத்தாக்கும்.

(i) மயக்கநிலை ஏற்படும்
(ii) கண்மடல் சோர்ந்து போய் பார்க்கணை மறைக்கும் ஒரு பொருள் இரண்டாகத் தெரியும்.
(iii) தசைகளில தொழிற்பாடு, அற்றுப்போய் இறுதியில் சுவாசத் தசைகளின் தொழிற்பாடு நின்று மரணம் சம்பவிக்கலாம்.

புடையன்பாமபு கடிப்பின்:- அதனின்று வெளிவரும் நஞ்சு இரத்தம் உறைவதைத் தடுப்பதால், இரத்தப் பெருக்கு ஏற்படும். தலையிடி, தலைச்சுற்று, ஒக்காளம், வாந்தி, குருதித் தூப்பல், தோலின் கீழ் குருதிப் பெருக்கு ஏற்படும். இறுதியில் அதிர்ச்சியினால் மரணம் சம்பவிக்கும்

முதலுதவி:-

1, ஆதரவு வார்த்தை கூறுதல்- இது மிகவும் அவசியம்.

[7ஆம் பக்கம் பார்க்க]

யசிந்தா ஆசீர்வாதம்

அவற்றுட்சில:

(அ) எலாப்பிட்டுகள் [Elapids]
(i) நாகபாம்பு
(ii) எட்டடி விரியன்
(iii) வரிப்புடையன்

(ஆ) புடையன் வகை
(i, முத்திரைப்புடையன்
(ii) சுருட்டைப்புடையன்

மேற்குலகில் நவீன அடிமைகளாக மூன்றாம் உலக அகதிகள்

குவைத் அடங்கலாகப் பல வளைகுடா நாடுகள் ஆசிய நாட்டுத் தொழிலாளர்களுக்குத் தங்கள் கதவுகளை அடைத்துக் கொண்டுள்ளன. இந்தத் திடீர் முடிவுக்கு உடனடிக் காரணம் 1991 வளைகுடாப் போர். வளைகுடா நாடுகளுக்கு உழைப்பை நாடிச் செல்லும் தமிழ் இளைஞர்களுக்கு இந்த அறிவிப்பு ஒருவிதத்தில தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது இதில் வேடிக்கையெல்லாம் குவைத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு தரப்படும் என்று ஐ.நா நஷ்டஈட்டுக்கான ஆணைக்குழு அறிவித்திருந்ததுதான் தாமதம், அதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இதுவரை கவனிக்கப்படவில்லை இது அங்கு வேலை பார்த்த தமிழர்களிடையே வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது 27 ஜூலை 1993 இல் ஜெனிவா நகரில் கூடிய ஐ.நா. நஷ்டஈட்டுக்கான ஆணைக் குழுவின் முன சிறிலங்காவின் ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி இழப்பீடுக்கொடுப்பவு பின்தள்ளப்பட்டு வருவதாகப் பிரஸ்தாபித்துள்ளார்.

குவைத் நாட்டு ஜனத்தொகையில் பாதியில் ஒருவிகிதத்தினர் ஆசிய நாட்டுப் பணிப் பெண்கள் என 'மிடில் ஈஸ்ட் வாச்' (Middle East Watch) என்ற மனித உரிமைகள் அமைப்பின அறிக்கை கூறுகிறது. இவர்கள் எஜமானர்களால் துன்புறுத்தப்படுவது சர்வசகஜம். வளைகுடா நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின தொழிலாளர் சட்டங்கள், தொழிற்சாலைகளுக்குக் குறிப்பாகப் பெண் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்புத் தருவதில்லை. உதாரணமாக, குவைத்தில் பணிபெண்களாகப் பணிபுரியும் பங்களாதேஷ், இந்தியா, பிலிபைனஸ், இலங்கையைச் சேர்ந்த சுமார் 2,000 பெண்கள் தாம் துன்புறுத்தப் படுவதாகக் கூறித் தத்தமது தூதுவராலயங்களில் சரணடைந்தார்கள். பல வகையில் பணிப் பெண்கள் துன்புறுத்தப்படுவது மறைமுகமாக இருந்தாலும், இப்போது வெளிப்படையாகியுள்ளது. விஷயம் பரவ, வளைகுடா நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண் வேலை தேடுவதில் நம்மவர்கள் இப்போது நாட்டம் காட்டுவதில்லை.

மீளவும் மத்திய கிழக்கு நாடுகளில்தொழில்சார்ந்தபயிற்சி பெற்றவேலையாட்களுக்கு (Skilled Worker) மாத்திரம் தொழில் வாய்ப்புகள் இருப்பதாக கொழும்பில் சிறிலங்கா அமைச்சர் ஒருவர் அண்மையில் அறிவித்துள்ளார். இதனை அடுத்து இடம் பெயர்ந்து கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்கள் ஏமாற்றமும் ஏஜெண்சிகளை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று தகவல். விண்ணப்பங்களை பரிசீலித்து வேலை வாய்ப்புத் தருவதில் 'வழக்கமான நடைமுறை' பின்பற்றப் படுகிறதாம்.

அறிவுஜீவிகள் புலம் பெயர்வு:

இப்போது தமிழர்கள் தமது கவனத்தை ஐரோப்பிய நாடுகள் பக்கம் திருப்பிக் கொண்டிருக்கிறார்கள். அறிவு ஜீவிகளுக்கு இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஒரு விதமான விருப்பம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஓர் உயர் கல்வி போதனா நிலையதிலிருந்து சுமார் 30க்கும் அதிகமான அறிவு ஜீவிகள் பல வருட காலமாக அங்கேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. இதனால் உள்ளூர் மருத்துவ மனைகள் வழக்கமான உயர் கல்விப் பணி ஆகியன பாதிப்படைவதாக ஆதங்கம் தெரிவிக்கப்படுகிறது. உயர் தொழிலில் ஈடுபடலாம், பணத்திற்குக் குறைவிருக்காது, எல்லாம் சுகமாக முடியும் அல்லது சும்மா இருப்பது சுகம் தரும் என்ற மனோரதத்தால் இவர்களில் ஒட்டுமொத்தமாகக் குடும்பத்துடனும் 'மாறி'யுள்ளார்கள். ஆனால் நிஜம் இவர்களை விட்டு விலகி நிற்கிறது. ஐரோப்பாவில் அடிமைத்தனமான வேலை வாய்ப்புகளே கிடைக்கின்றன. இன்னும்சொல்லப்போனால்இவர்களின் வெளிநாட்டு உலாவுக்குப் பிணைநின்ற சிலர் தர்ம சங்கடமான நிலையில் சிக்கிக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொருவரும் தலா சுமார் 2 லட்சம் ரூபா சிறிலங்கா அரசுக்குச் செலுத்தவேண்டியுள்ளது. தவறான அனுமானங்களும். தெளிவற்ற குறிக்கோள்களுமே இதற்கான காரணங்கள் என்று பேசிக் கொள்ளப்படுகின்றன.

மேலும் சாதாரண வருமானம் உள்ளவர்களும் கூட தொழில் - வியாபாரம் பார்க்கலாம், உயர்மட்ட வாழ்க்கை வாழலாம் என்ற அபிலாசைகளால் உந்தப்பட்டு பல சிரமங்கள் மத்தியிலும் ஐரோப்பிய நாடுகளுக்குப்பயணத்தை மேற்கொளகிறார்கள். ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்பதுதான் இவர்கள் நிலை. இவர்கள் பூகோள ரீதியாக, தட்பவெட்ப நிலை வேறுபாடுகளைக் கொண்ட நாடுகளில் வாழ்வதால் உடல் வளமும் பாதிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளின் இனத் துவேஷம்

வேலையில்லாத் திண்டாட்டம் ஐரோப்பிய நாடுகளை அழுகுவதால், ஆசிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் வெளியேற வேண்டும் என்ற விஷயத்தில் ஐரோப்பிய அளவில் கருத்தொற்றுமை இருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து ஐரோப்பிய நாடுகளில் இரு கருத்துக்கே இடமில்லை. இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து (சுவிஸ்) ஆகிய நாடுகள் தமது குடிவரவுச் சட்டங்களை மிகவும் கடுமையாக்கி உள்ளன. ஆசிய நாடுகளிலிருந்து பலதரப்பட்ட காரணங்கள் கூறிச் 'சுக வாழ்வும்', தொழில்வாய்ப்பும் தேடி இந்நாடுகளில் நுழைபவர்களை அனுமதிப்பதா, இல்லையா என்பது புதிய விதிமுறைகளுக்கு அமைவாக முடிவு செய்யப்படவுள்ளது. மேலும், பயண ஆவணங்கள் மற்றும் காரணங்கள் திருப்திகரமாக இல்லாதவர்களை விமான நிலையத்தில்வைத்தே திருப்பி அனுப்ப ஜேர்மானிய குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம் இடமளிக்கிறது. சுவிஸ் அரசு அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை வரும் டிசம்பர் வாக்கில் திருப்பி அனுப்ப ஒப்பந்தம் ஒன்றைச் சிறிலங்கா அரசுடன் மிக அண்மையில்செய்துகொண்டுள்ளது

ஐரோப்பிய நாடுகளில்ஆசிய நாட்டவர்களுக்கு எதிரான புதிய நாஜி துவேஷம் ஆழ வேருன்றி இருப்பதால் இன வன்முறை கடுமையாகி வருகிறது. ஜெர்மனியில் கடந்த இரண்டு வருடங்களில் 25 அந்நியர்கள் கொல்லப்பட்டும், இதனால் மலேசிய தொழிலாளர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற அச்சத்தை மலேசிய தொழிற்சங்க காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது. பங்களாதேஷ், இலங்கை, (பெருமளவு தமிழர்கள்) பாகிஸ்தான் இந்தோனீசியா, பிலிப்பயின்ஸ், இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தே தொழிலாளர் வேலை வாய்ப்புத் தேடி மலேசியாவில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ளனர்.

மலேசியாவில் சட்டவிரோதமாக நுழைந்துள்ள ஆசியத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1.5 மில்லியனாகும். முறை தவறிச் சட்ட விரோதமாக நுழைந்தவர்களைத் தண்டிக்கப்போவதாக மலேசிய அரசு கடந்த ஜூனில் அறிவித்தது. அத்துடன் கள்ளக் குடியேற்றக்காரர்களுக்குத்துணை போன தரகர்களையும் தண்டார்கள் என்று உத்தியோக பூர்வ அறிக்கை ஒன்று கூறுகிறது. எண்ணிக்கை இதனை விடக் கூடுதலாக இருக்கலாம். இறந்தவர்களுக்கு இழப்பீட்டுப் பணம் வழங்குவதைத் தவிர ஆசிய நாட்டவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலையில் பொன் அரசு இல்லை இதற்கு அரசியல் - பொருளாதார நிலை காரணமாக இருக்கலாம். கனடாவில் நடைபெறும் இனத்துவேஷ வன்முறைச் சம்பவங்களால் அங்கு குடியேறியுள்ள இலங்கைத் தமிழர்களும் பாதிக்கப்படுகிறார்கள் அண்மையில் ரொரன்ரோவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றில் சிறுபான்மையினரை (தமிழரை) அவதூறு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றதை அடுத்து ரொரன்ரோ நகர மேயர் ஜீன் லோரன்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இவற்றிற்கெல்லாம் முடிவைத் தாற்போல் அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன், "எல்லைகளை மூடுவதன் மூலம் சட்ட விரோதக் குடியேற்றங்களைத் தடுக்க முடியாது. சட்ட ரீதியான குடியேற்றக்காரர்களையும், சட்ட ரீதியான அகதிகளையும் ஏற்று, சட்டத்துக்கு மாறாகக் குடியேறியவர்களை வெளியேற்றுவதே வழி" என்றார்.

மலேசியா தரும் பாடம்

வெளிநாட்டுத் தொழிலாளர் மீது வரிவசூலிப்பதென்று 1991இல் மலேசிய அரசு ஊர்ஜிதம் செய்தது. வரியிலிருந்து தப்புவதற்காகச் சட்டவரம்பு மீறி மலேசியாவில் குடியேறுபவர்களின் தொகை அதிகரித்தது. ஏமாற்றமும் ஏஜென்சிகளே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளதாக அனைத்துலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (ICFTU) அதன் செய்தி அறிக்கையில் தெரிவிக்கின்றது வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் சம்பளக் கொடுப்பனவும் கையில் கடிக்கும் தொகை. ஆசிய நாட்டவர்கள் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்ய விரும்புவதால், அவர்கள் தொழில் முயல்வோராலர்களத்தனமாக வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள் என

மதன்

1980களுக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளில் குடியேறிய இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை வருமாறு:

இங்கிலாந்து	—	50,000
ஜேர்மனி	—	50,000
கனடா	—	40,000
பிரான்ஸ்	—	30,000
சுவிஸ்	—	30,000
ஹொலன்ட்	—	25,000

இந்த நாடுகளைவிட அவுஸ்ரேலியா, அமெரிக்கா, இத்தாலி, நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் இலங்கைத் தமிழர் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

டிப்பது மலேசிய அரசின் திட்டங்களில் ஒன்றாகும். இந்தக் கைங்கரியத்தை மலேசிய அரசு 10 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிறைவேற்றவுள்ளது. மலேசியாவின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் தொழிற்சாலைகளில் தமிழ் இளைஞர்களும் இந்தப் புதிய சட்டவிதிகளால் பாதிப்படைவார்கள். தைவானிலும், கொரியாவிலும் இதே நிலைதான். ஆசியத் தொழிலாளர் நுழைவதற்குக் கொரியா குடியரசும் தடைபோட்டுள்ளது. தொடர்ந்தாற் போல 1991 இல்தைவானும் தடைபோட்டுள்ளது. கொரியாவில் 1,40,000 பேரும், தைவானில் 30,000 பேரும் சட்ட விரோதமாகத் தொழில் புரிகிறார்கள்.

ஜப்பானிய மாயை

மூன்றாம் உலக நாடுகளில் ஜப்பான் என்ற ஒரு மாயை நீடித்து விடுகின்றது ஜப்பான் ஒரு பூலோகசுவர்க்கம். அங்கு கைநிறையச் சம்பளம் தரப்படும் என்று கொழும்பில் மழைக்காளான் ஏஜென்சிகள் 'ஆள் சேர்க்கும் பணியில்' ஈடுபட்டுள்ளன. ஆனால் ஜப்பானிய நாட்டைப் பொறுத்தவரை விசா இருந்தால்தான்உள்ளே நுழைய முடியும் என்பது சட்

(7ஆம் பக்கம் பார்க்க)

2-ம் ஆண்டு நினைவஞ்சலி

லெப். செல்வம்
(ந. தர்மதாஸ் விமலதாஸ்)
01 - 02 - 1974 < தோற்றம்: > 27 - 05 - 1972
17 - 06 - 1991 < மறைவு: > 18 - 08 - 1991

லெப். சீசர்
(ந. தர்மதாஸ் அன்ரன் ஜெனதாஸ்)

தமிழீழ தாயின் அடிமை விலங்கொடிக்க
எழுந்த விடுதலை சூரியன்களே
தரணி போற்றும் தமிழ் தலைவன் தலைமையிலே
உறுதியுடன் களத்தில் போராடி
எத்தனை இடர் துயர் வந்தாலும்
எம் தாய் நாட்டை நாம் மீட்போம்
என்று இறுதிவரை உறுதி குலையாது
தமிழ் வாழ உயிர் தந்த மாவீரர்களே
தம்பியுடன் அண்ணனும் சேர்ந்து
தாய் மானம் காக்கும் போரினிலே
மாவீரர் ஆனீரோ, மாவீரர் ஆனீரோ.

உமது பிரிவால் வாடும்
தகப்பன், தாய், சகோதரங்கள்.

(5674)

இரண்டாம் கட்ட தமிழீழப் போரும் சிறிலங்கா இராணுவமும்

- ஜெயராஜ் -

இரண்டாம் கட்ட ஈழப் போரில், மூன்றாம் ஆண்டின் முடிவில் மண்கிண்டிமலையில் ஏற்பட்ட தோல்வியானது சிறிலங்கா அரசாங்கத்தைக் கொதிப்படையச் செய்துள்ளது ''உயர் இராணுவ அதிகாரிகள் தமது பணியைச் சரியாகச் செய்ய வேண்டும்; அல்லது அதற்கான பிரதிபலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.'' என கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா ஆகியோரை சிறிலங்கா ஜனாதிபதி எச்சரிக்கும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது.

1990இல் ஆரம்பமான இரண்டாம் கட்டஈழப் போரானது, 1991இல் ஆனையிறவு, மணலாற்றுப் பெரும் சமர்கள், 1992இல் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் மின்னல்வேக அதிரடித் தாக்குதல்கள், இதன் உச்சமாக நிகழ்ந்த டென்சில் கொப்பேகடுவவைப் பலி கொண்ட அராலிக் கண்ணி வெடித்தாக்குதல், கடற்புலிகளின் போர்ப் பிரவேசம் எனப் பல பரிணாமங்களைப் பெற்று விரிவடைந்தது இதில், இறுதியாக இடம்பெற்ற மண்கிண்டிமலை இராணுவம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலானது, இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஓர் எல்லை என்றே கூறலாம்.

இரண்டாம்கட்டஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டுசுமார் மூன்று மாத காலப்பகுதிக்குள்ளேயே குறுகிய காலத்தில் ஓர் இராணுவ வெற்றியை ஈட்டி விடலாம் என்ற தனது அபிலாசை தவறானது என்பதை அரசாங்கமும், இராணுவமும் உணர்ந்து கொண்டன. அப்பொழுது ''சண்டேரைம்ஸில்'' யுத்த நிலையைப் பற்றி விமர்சனம் செய்த கேணல் சுனில் பீரிஸ் ''உண்மையில் வடபகுதியில் இராணுவத்தின் பலமும், விடுதலைப் புலிகளுக்கு நிகராகவுள்ளது. விடுதலைப் புலிகளின் போர் முறைகள் உலகில் எந்த கெரில்லா அமைப்பும் கையாண்ட யுத்த நியமங்களை எல்லாம் விஞ்சியதாகவே உள்ளது'' எனக் குறிப்பிட்டார்.

இந் நிலையில், இப்போரில் சிங்கள இராணுவம் வெற்றி கொள்வதற்கான தனது ஆலோசனைகளையும், தெரிவித்திருந்தார் அதன்படி ''கிழக்கில் இருந்து மேற்குவரை ஒரு கோடடைக் கிழித்து, பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலமும், நீண்டகால யுத்தத்தை எதிர்கொண்டும் விடுதலைப் புலிகளைத் திணறடிக்கலாம்'' என்பது அவரது ஆலோசனையாகும்.

கேணல் சுனில் பீரிஸின் ஆலோசனையை அரசாங்கம் கருத்தில் கொண்டதோ இல்லையோ, ஆனால், இதைஒத்த மூல தந்திரோபாயம் ஒன்றையே சிறிலங்கா இராணுவம வகுத்துக் கொண்டதோடு செயற்படுத்தியும் வந்தது. இதன் அடிப்படைக்கூறுகளாகப் பொருளாதாரத் தடையும், இராணுவ வேலிகளும் அமைந்த அதேவேளை இராணுவமும் பெரும் விரிவாக்கம் கண்டது.

இராணுவ விஸ்தரிப்பு

1990ஆம் ஆண்டளவில், 800 கோடி ரூபா மட்டுமே இருந்த இராணுவச் செலவீடானது, 1993இல் மூன்று மடங்கிற்கும் அதிகமாக 2500 கோடி ரூபாவையும் தாண்டிச் சென்றது போர் முனையில், கவச ஆயுதங்களும், சுப்பர் சொனிக போர் விமானங்கள் உட்பட தாக்குதல் திறன் வாய்ந்த விமானங்கள், ஹெலிகப்டர்கள், பீரங்கிக் கப்பல்கள், அதிவேக நவீனபடகுகள் என்பனவும் அறிமுகப்படுத்தப்பட்டன.

அத்தோடு, இராணுவ அணிகளும பெருக்கப்பட்டன இராணுவத்தில் மட்டும் 90,000 பேர் வரையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஏனைய படைப் பிரிவுகள் இதை ஒத்த / சில இதை மிஞ்சிய அளவில் பலம் பெற்றன. பெருக்கமடைந்தன. மேலும், இராணுவத்தினரின் அதிகார வரம்பும் கணிசமான அளவில் வளர்ந்தது. அநேக மூன்றாம் உலக நாடுகளில் காணப்படுவது போன்று அரசியலில் பலம் பொருந்திய சக்தியாகவும் அது மாறியது.

போராட்டக் கருவை அழித்தல்

இவ்வாறு வளர்க்கப்பட்ட இராணுவமானது தமிழர் தேசிய இனப்போராட்டத்தை நசுக்கவும்' போரில் வெற்றி பெறவும் இரண்டு அடிப்படை நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டது. ஒன்று விடுதலைப் போராட்டத்திற்கான அடித்தளமாக விளங்கும் ''பாதுகாப்பான சுவர்க்கபூமி' எனக் கருதப்படும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுதல் இரண்டு. ஈழக் கோரிக்கையின் அடிப்படைக் கருவை அழித்து விடக் கூடியதான குடியேற்ற திட்டங்களை நிறுவுதல்.

இதில் ஈழக் கோரிக்கைக்கான அடிப்படைக் கருவை அழிக்கும் திட்டமானது 1983ஆம் ஆண்டு தமிழீழப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக விருத்தியடையும் முன்பே திட்டமிடப்பட்டதாயினும் இரண்டாம்கட்ட ஈழப் போரின் பின் அவை தீவிரமாக்கப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

ஆனால், இத்திட்டமானது விடுதலைப் புலிகளையோ தமிழீழ விடுதலைப் போராட்டத்தையோ தோற்கடிக்க வென தனியாக இராணுவத்தால் வகுத்துக் கொள்ளப்பட்டதல்ல. இத்திட்டத்தை உருவாக்கியவர்கள் சர்வதேச ரீதியில் பெரும் பதவிகளில் அமர்ந்திருப்போரும், உள்நாட்டில் பேராசிரியர் பதவிகளில் இருப்போரும். மற்றும் புத்திஜீவிகளும, நிர்வாக உயர் அதிகாரிகளும் ஆவர். ஆயினும் இத்திட்டத்தின் சூத்திரதாரி மலிங்க ஹேர்மன் குணரத்தின என்பவராகும்,

இத்திட்டம்ஆரம்பத்தில் சில சிக்கல்களை ஏற்படுத்திய போதும், அரசியல் வாதிகளையும் மீறி சிங்கள நிர்வாக அதிகாரிகள் இதில் பெரும் அக்கறை காட்டினர் குடியேற்ற திட்டங்கள் பற்றி இதன் சூத்திரதாரியான எம். எச். குணரட்ணா கூறுகையில்,

''யான் ஓயாவில் குடியேற்றங்கள் சரியாக நடந்திருந்தால், அங்கு இன்று மேலும, 50,000 மக்கள் (சிங்களவர்) இருந்திருப்பார்கள். இதனால், யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலையும் மட்டக்களப்பும் துண்டிக்கப்பட்டிருக்கும்''.

''இந்த யான் ஓயாவில் ஒரு அணைக்கட்டைக் கட்டி மக்களை குடியேற்ற அரசிற்கு சிபார்சு செய்திருந்தோம். ஆரம்ப வேலைகளும் நடைபெற்றன,'

''மதுறு ஓயா, யான் ஓயா ஆகிய இரு குடியேற்ற திட்டங்கள் மூலம் ஈழ அடிப்படையை நாம் அழித்திருப்போம். மல்வதாது ஓயா குடியேற்றம் அமைந்திருந்தால் மன்னார் முழுமையாக வடமேல்மாகாணத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருக்கும்.''

''வெலிஓயா குறிப்பிடத்தக்க ஒரு குடியேற்ற திட்டமாகும்... இக்குடியேற்றம் ஈழப் பிரதேசத்திற்குள் ஊடுருவியிருப்பதும் இதற்குக் காரணமாகும்''

இவ்வாறான எம். எச் குணரெட்னா போன்றோரின் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஈழப் போரை தோற்கடிக்கலாம் என்றரீதியில் இரண்டாம் கட்ட ஈழப்போரின் போது இவற்றில் அக்கறை காட்டப்பட்டது. அதாவது ஈழப்போரின் கருவை அழிப்பதன் மூலம் தமிழீழம் பெறமுடியும் என்ற நம்பிக்கையை மழுங்கச் செய்துபோராட்டத்தில் நம்பிக்கையை இழக்கச் செய்வதே நோக்கமாகும்.

யாழ். மீதான படை எடுப்பு

அடுத்ததாக போராட்டத்தின் மையமாகச் செயற்படும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதாகும். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகை இடுதலும், பின்னர் தாக்கிக் கைப்பற்றுவதுமான அம்சம் இருந்தது.

இதன் ஒருகட்டமாக 1991 ஒக்டோபரில ஒபரேசன் வலம்புரி இராணுவ நடவடிக்கை மூலம் பூநகரிப்பாதை மூடப்பட்டது இருப்பினும், கொம்படிப் பாதை பயன்பாட்டிற்கு வந்தது 1992 யூனில் பலவேகய II இராணுவ நடவடிக்கை மூலம் கொம்படிப் பாதை மூடப்பட்டபோது விடுதலைப் புலிகள் போத்தல் ஒன்றிற்குள் அடைக்கப்பட்டதாக சிறிலங்கா இராணுவம் கருதியது.

ஆனால் கடற்புலிகளின் போர்ப்பிரவேசமும் கிளாலிப் பாதை திறப்பும் யாழ்ப்பாணக் குடாநாட்டுமுற்றுகையைஇராணுவத்தால்பூரணப்படுத்தமுடியாமல் போனதை வெளிக்காட்டியது. இருப்பினும் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் திட்டம் சிறிலங்கா இராணுவத்தால் கைவிடப்படவில்லை 1992 ஆம் ஆண்டு இறுதிக்குள் யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் என்பது பிரதான நோக்கமாக இருந்தது.

இந் நிலையில் தான் 1992 ஆகஸ்ட் மாதம் 8ஆம் திகதி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரெட்னா, வடபகுதி கடற்படை தளபதி ரியர் அட்மிரல் ஜெபமான உட்பட ஒன்பது உயர் அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித்தாக்குலில் கொல்லப்பட்டமையானது சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதல் திட்டத்தையே காலவரையறையின்றி ஒத்திவைத்தது.

சுருக்கமாகக் கூறின், விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது இராணுவத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றை தகர்த்தெறிந்தது என்றேகூறலாம் இதுகுறித்து சுமித்திரா பெர்ணாண்டோ பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரம் காட்டிக் கூறியுள்ளது பொருத்தப்பாடானதாகும். ''கூட்டுப்படைகளின் இராணுவநடவடிக்கைகள் மூலம் வடக்கைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் இராணுவத்தின் திட்டத்திற்கு கொப்பேகடுவ - விஜயவிமலரெட்னா ஆகியோரின் கொலைகள் முற்றுப்புள்ளி வைத்தது இவர்களின் மரணங்கள் போன்று வேறு எந்தச் சம்பவமும் யுத்த உத்திகளை இவ்வளவு மோசமாகப் பாதித்ததில்லை.'' என்பதே அதுவாகும்.

இந்தநிலையில் தான்அடுத்த அம்சமாக மண்கிண்டி மலை இராணுவமுகாம் தகர்ப்பும் முக்கியம் பெறுகின்றது மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பானது வடக்கில் இருந்தோ, கிழக்கில் இருந்தோ சிங்கள குடியேற்றவாசிகளை வெளியேற்றி விட்டதாகவோ அன்றி, வடக்கு-கிழக்கிற்கான தமிழர் தாயகத்தின் இணைப்பை துண்டாடும் திட்டத்தை முற்றாக நீக்கிவிட்டதாகவோ இல்லை.

இருப்பினும், யாழ்ப்பாணத் தாக்குதல், எவ்வாறு சிறிலங்கா உயர் தளபதிகளின் மரணத்தினால், பாதிக்கப்பட்டு யுத்த உத்திகளால் பின்னடையச் செய்ததோ அதேபோன்றே, மண்கிண்டி மலைத் தாக்குதலானது தமிழீழத்தின் கருவை சிதைக்கும் சிங்கள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள். நிர்வாகிகள் இராணுவம் ஆகியவற்றின் கூட்டுத்திட்டத்தில் விழுந்த ஓர் பலமான அடியாகும்.

மேலும் விடுதலைப் புலிகள் மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு இதயபூமி I எனப் பெயரிட்டமையானது, மணலாற்றுப் பிரதேசத்தில் தொடர்ந்தும் தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்தை இராணுவ தரப்பிலும், அரசு தரப்பிலும் ஏற்படுத்தியுள்ளது இந்நிலையில் மணலாற்றுப் பிரதேச முகாம்களையும், சிங்கள குடியிருப்புக்களையும் பாதுகாப்பது என்பது முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது தற்பொழுது சிங்களக் குடியேற்றவாசிகள் குறிப்பிடக்கூடிய அளவில் வெளியேறியுள்ளதோடு, அரசு தமது பாதுகாப்பைஉறுதிப்படுத்தவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் விளைவுதான் சிறிலங்கா ஜனாதிபதி டி.பி.விஜபதுங்காவை பாதுகாப்பு அதிகாரிகள் மீது சீறவைத்துள்ளதோடு எச்சரிக்கையும் செய்ய வைத்துள்ளது. சிறிலங்காவில் இதுவரை இருந்த ஜனாதிபதிகளில் பலவீனமான ஜனாதிபதி எனக் கருதப்படுபவரை இதுவரை இருந்த பலமான ஜனாதிபதிகள் எச்சரிக்காத அளவிற்கு எச்சரிக்கவைத்ததோடு அதற்கான விளைவுகளைப்படைத்தளபதிகள் ஏற்க வேண்டும் எனவும் கூற வைத்துள்ளது.

இந்நிலையானது இரண்டாம் கட்ட ஈழப்போரின் மூன்றாண்டு கால முடிவில் சிறிலங்கா இராணுவம் தனது போரின் யுக்திகளை இழந்துநிற்பதையே காட்டுகின்றது இதனைவலியுறுத்துமாப் போலவே கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றபாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில்பேசிய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான ஐந்து நட்சத்திர ஜெனரல் சேபால ஆட்டிக்கலபேசியது இருந்தது. அவர் பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் கோபம் மிகுந்திருந்த வேளை ஒன்றில் தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோது தயாரித்த ''போரிடும் பிரிவுகளின் மூலோபாயம்'' - Battle Groups Strategy என்ற அறிக்கையை நினைவூட்டியதோடு அந்த அறிக்கை முழுமையாகக் கைப்பிடிக்கப்படாததையிட்டும் குறைகூறியமை இருந்தது.

பாம்புகளும்

ஏனெனில் 70 சதவீதமான பாம்புக்கடிகள் நச்சுத் தன்மையற்ற பாமபுகளினாலேயே ஏற்படுகின்றன. நச்சுத் தன்மையற்ற பாம்பு கடித்த போதும் ''பாம்பு கடித்துவிட்டது'' என்று அதிர்ச்சிக்குள்ளாகி அதனாலேயே ஒருவர் இறக்கலாம். எனவே ஆதரவு வார்த்தை மிகமிக இன்றியமையாததொன்றாகும்.

2) கடிபட்ட இடத்திற்கு சிகிச்சை:-

சுத்தமான நீர், சவுக்காரம் கொண்டு கழுவலாம் அல்லது மெல்லிய சுத்தமான துணியினால் துடைக்கலாம், இதனால் மேற்பரப்பிலுள்ள நஞ்சை அகற்றிவிட முடியும்.

இங்கு காயத்தை வெட்டி, வாயால் உறிஞ்சுதலை முற்றாக தவிர்க்கவேண்டும். ஏனெனில், காயத்தை வெட்டுவதன் மூலம் வெளித்தோலில் உள்ள நஞ்சை சிலசமயங்களில் இரத்தத்துடன் கலப்பதற்கான செயற்பாட்டை செய்கிறவர்கள் ஆகின்றோம். அத்துடன் எந்தவிதமான இரசாயனப் பொருள்களையும்(கொன்டிஸ்) காயத்திற்கு மேல் இடுதல் நோயாளிக்கு மதுபானம் கொடுத்தல் என்பவற்றை முற்றாகத் தவிர்க்கவேண்டும் 3) கடிபட்ட இடத்தை அசையாமல் வைத்து. காலில் கடித்தால் நோயாளியை நடக்க விடாது தூக்கி செல்லவேண்டும்.

4) கட்டுப்போடுதல்:-

கை, கால் கடித்தால், கடித்த இடத்திற்கு மேல் ஒரு துணியைப்பாவித்து இறுக்கமற்ற கட்டுப்போடவும் இது நாடிச்சுற்றோட்டத்தை தடுக்காமல் மேற்பரப்பிலுள்ளநாளச்சுற்றோட்டத்தை மட்டுமே கட்டுப்படுத்தவேண்டும், என்பதே நோக்கமாகும்.

(8ஆம் பக்கம் பார்க்க)

மேற்தலகில்

டம். மற்றும்படி உள்நுழைவது அதிர்ஷ்டத்தைப பொறுத்தது

ஜப்பானிய வம்சாவழியினரான லத்தீன் அமெரிக்கத் தொழிலாளர்கள் 50,000 பேர் மட்டும் தொழில் காரமாக ஜப்பானில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் இது இப்படியிருக்க, 1,00 000 ஜென் செலவில் (தற்போதைய நாணய மற்று விகிதப்படி 600 அமெரிக்க டொலர்) ஜப்பானுக்குத் தொழிலாளர்கள் கடத்தப்படுகிறார்கள். கொழும்பில் இதற்காக வசூலிக்கப்படும் தொகை சுமார் 5 லட்சமாகும். அந்நியத் தொழிலாளர்களின் உடலுழைப்புச் சுரண்டப்படுவதாக ஜப்பானிய தேசிய தொழிற் சங்க மையம் (Rengo) எச்சரித்துள்ளது. 87 சத விகிதமான ஆசிய நாட்டுத் தொழிலாளர்கள் கடின நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. சர்வதேச தொழிலாளர் மையம் (ILO 73 சத விகிதமான அந்நிய நாட்டுப் பெண்கள் (தொழிலாளர்) இரவு விடுதிகளிலும். கேளிக்கை நிலையங்களிலும் தொழில் புரிவதாகக் கவலை தெரிவித்துள்ளது அந்நியத் தொழிலாளர்களும், பெண்களும் ஜப்பானுக்குள் மூன்று மாதச் சுற்றுலா விசாவில் (Tourist Visa அழைத்து வரப்பட்டவர்கள் தங்கியிருக்கும் மூன்று மாதகாலத்தில நாளொன்றுக்கு 12 முதல் 14 மணி நேரம் தொழில செய்கிறார்கள்.

ஜப்பானில் கல்வி கற்கவரும் வெளிநாட்டவர்களுக்கு 4மணி நேரம தொழில செய்து சம்பாதிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது ஆனால, உண்மையில் ஆசிய மாணவர்கள் தமது படிப்பை உதறிவிட்டு நா

[8ஆம் பக்கம் பார்க்க]

அகதிகளை அனுப்புவதை கண்டித்து உண்ணாவிரதம்

(சென்னை)

நேற்று சென்னையிலிருந்து இலங்கை அகதிகளை ஏற்றிக் கொண்டு கப்பல் புறப்படவிருந்த சமயம் இந்திய-இலங்கை நட்புறவுச்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்த உண்ணாவிரதத்தில் 60முதல் 100 பேர் வரையில் பங்குபற்றினர். சென்னை குறளகம் பகுதியில் நடந்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தி மு க., பாட்டாளி மக்கள் கட்சியின் பிரமுகர்கள் வந்து பார்த்ததாகவும் எனினும் அ. தி. மு க., காங்கிரஸ் கட்சியினர் இதை கண்டு கொள்ளவில்லை எனவும் பி. பி. ஸி, குறிப்பிட்டது.

படகோட்டிகளின்

நிறுத்திவிட்டு பாய்க்கப்பல் மூலம் மெது மெதுவாக பயணத்தை தொடர்கின்றனர். இவ்வாறான ஒரு நடவடிக்கை அன்று நடந்த போதுதான் சிறிலங்கா கடற்படையினரிடம் நாங்கள் மாட்டிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

கடற்படையினர் கைது செய்து படகோட்டிகளை தாக்கினர். கைது செய்யப்பட்ட என்னை கடற்படையினர் 12 மணித்தியாலங்கள் கண்கள், கைகளை கட்டி வைத்து விசாரணை மேற்கொண்டனர். என்னைக் கைது செய்ததும் பூநகரி முகாமுக்கு கொண்டு சென்றனர். அங்கு முதல் விசாரணை முடிவடைந்ததும் பலாலிக்கு மாற்றப்பட்டேன் என்றார்:

மூளாய் கடலில் வைத்து கைது செய்யப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட நவரத்தினம்-சிவரத்தினம் [வயது 23] என்பவர் தெரிவிக்கும் போது கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த எங்களை கடல் கண்ணிவெடி வைக்கிறீர்களா என்று கேட்டு கைது செய்து எங்களை மாறி மாறி தாக்கினர். எங்களது வலை, வள்ளத்தையும் கடற்படையினர் பறித்து விட்டனர் என்றார்.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

'Wild Geese'

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114

இன்பருட்டி கிராம முன்னேற்றச் சங்க

38-வது

ஆண்டு நிறைவு விழாவும்

மாவீரர் நினைவாக காண்டீபன் கழக

விளையாட்டுப் போட்டியும்

இடம்: இன்பருட்டி காண்டீபன் அரங்கம்

காலம்: 14, 15-08-93 சனி – ஞாயிறு

விழாத் தலைவர்:

திரு. க. சிவராசா அவர்கள்

(நிலையத் தலைவர்)

பிரதம விருந்தினர்:

திரு. சூசை அவர்கள்

(கடற்புலிகளின் விசேட தளபதி)

சிறப்பு விருந்தினர்கள்:

திரு. எஸ். முருகேசம்பிள்ளை அவர்கள்

(பருத்தித்துறை பிரதேச செயலர்)

திரு. சங்கீதன் அவர்கள்

(வடமராட்சி வட – கிழக்கு கடற்புலிகள் பொறுப்பாளர்)

செல்வி நவமணி - கந்தையா அவர்கள்

(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திரு. ச. செவ்வந்திநாதர் அவர்கள்

(பிரதேச சபை செயலர்)

மற்றும் பருத்திநகர் எம். சான்டோ துரைரத்தினம் அவர்களினால் பயிற்சி அளிக்கப்பட்ட எமது கழக வீரர்களின் யிர்க்கூச்செறியும் வீரதீரச் செயல்களான அதிபாரம் கொண்ட லொறி ஒன்றை மார்பின் மீது ஏற்றுதல், அதிபாரம் கொண்டகனரக2 உழவு இயந்திரங்கள் மார்பின் மீது ஏற்றுதல், அதிவேகம் கொண்ட மோட்டார் சைக்கிளை தொண்டையினால் இழுத்துப் பிடித்தல், அதிபாரம் கொண்ட இரும்புக் குண்டை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏற்றுதல் மற்றும் பாரம் கொண்ட கல் உடைத்தல் இன்னும் பல வீரச் செயல்களும் இடம்பெறும்,

இரண்டாவது நாள்

ஆணழகன் போட்டியும்

கலை நிகழ்ச்சிகளாக

"வீரத்தின் சின்னம்" "ஜாதகம்"

சரித்திர சமூக நாடகங்கள் இடம்பெறும்.

-விழாக்குழு-

(5678)

1129 இல.

செயலர் திரு. அறோரா ஆகியோர் உடன் செல்கின்றனர்.

மேற்படி அகதிகள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் செல்லும் கப்பலுடன் இந்திய கடலோர காவல்படையின் கப்பல்களும் செல்கின்றன. மேலும் இதுவரை 29 ஆயிரம் பேர் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், ஏழாயிரம் பேர் இலங்கை செல்லவிருப்பதாகவும் மேலும் ஏழாயிரம் பேர் இலங்கைக்கு அடுத்தகட்டமாக அனுப்பிவைக்கப்படுவர் எனவும் திரு. ராம்தாஸ் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள 155 அகதிமுகாம்களில் சுமார் என்பதாயிரம் அகதிகள் இருப்பதாகவும் இன்னும் ஒரு மாதகாலத்தில் மேற்படி கப்பல் மூலம் இலங்கை திரும்பும் அகதிகள் வாரம் இரு முறை அனுப்பப்படுவார்கள் என்றும் ராம்தாஸ் தெரிவித்தார்.

பாம்புகளும்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

5) வேதனையைக் குறைப்பதற்கு 2 பனடோல் குளிசையை கொடுக்கவும். அஸ்பிரின் அல்லது டிஸ்பிரின் கொடுப்பதை தவிர்க்கவும்.

6) நோயாளியை உடனடியாக மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல வேண்டும்

7) பாம்பு கொல்லப்பட்டு இருப்பின் அதையும் கொண்டு சென்றால் அவசர வைத்திய சிகிச்சை செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பாம்புக்கடியில் இருந்து தப்புவதற்கு நாம் சில எளிமையான முன்னெச்சரிக்கை முறைகளைக் கையாளலாம்.

1) பெரும்பாலான கடிகள் காலிலே ஏற்படுவதால் பாம்பு இருக்கக்கூடிய உயரமான புற்கள் பற்றைகள் அல்லது காடுகளினூடு செல்லும் போது சப்பாத்து தடித்த நீண்ட காற்சட்டை அல்லது நீண்ட சாரம் அணிந்து செல்லுதல் வேண்டும்.

2) பாம்புகள் நில அதிர்வின் மூலமே, ஒலியை உணர்வதால் நடக்கும் போது கால்களால் நிலத்தில் அடித்துச் சென்றால் அவை அருகில் நில்லாமல் ஓடிவிடும்.

3) நெருக்கமான புற்கள் கற்குவியல்கள், மரவெடிப்புகள், அல்லது கறையான் புற்றுகள் என்பவற்றுள், கண்மூடித்தனமாக கையை உடபுகுத்தக் கூடாது.

4] பாம்புகள் பொதுவாகஎலி மூஞ்சூறு தேரை போன்றவற்றை உண்பதால் அவற்றை வீடுகளில் இருந்து ஒழிக்க வேண்டும்.

5] வீட்டைச்சுற்றி துப்பரவாகவைத்திருக்க வேண்டும்.

மேற்குலகில்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளொன்றுக்குப் 10 மணி நேரம் வேலை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவையெல்லாம் சட்டத்தின் கண்களுக்கு மறைந்து மிக இரகசியமாகவே நடைபெறுகின்றன. சட்டம் கண்டு கொண்டால் சிறைவாசம் அல்லதுநாட்டைவிட்டு வெளியேற்றம். ஆனால், நீதி தேவதையின் கண்களுக்குத்தானே கட்டப்பட்டுள்ளன.

ஐ எல். ஓ. (I. L. O.) எச்சரிக்கை

— 1991ஆம் ஐ. எல். ஓ. அதன் மாநாட்டில் ஏமாற்றும் ஏஜென்சிகள் மற்றும் தரகர்கள் பற்றி எச்சரித்தது. சிறிலங்கா உட்பட சம்பந்தப்பட்ட அரசுகள் இது குறித்துத் தகுந்த நடவடிக்கை எடுத்ததாக இல்லை.

— சட்ட விரோதமாகத் தொழிலாளர்கள் மற்றநாடுகளுக்குப் புலம் பெயர்வது எதிர்காலத்தில் சமூக — பொருளாதாரப் பிரச்சினைகளை உருவாக்கலாம் என்பது ஐ எல். ஓவின் நிலைப்பாடாகும்.

— வளர்முக நாடுகள் பொருளாதார வகையில் பின் தங்கிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவது தவிர்க்கப்பட வேண்டும் என்று ஐ. எல். ஓ. அதன் ஆழ்ந்த எதிர்பார்ப்பைத் தெரிவித்துள்ளது ஆனால் ஏழைகள் பங்காளர் என்று அடையாளம் காட்டிக்கொள்ளும் அரசுகள் அக்கறைகொண்டதாகத் தெரியவில்லை.

(சிலதரவுகள்: ICFTU)

பாலகனின்

யாழ். மடம் வீதியைச்சேர்ந்த மோதிலால் நேருவின் பாலகனின் சடலமேநேற்றையதினம் கரை ஒதுங்கியது.

இதேவேளை அடையாளம் காணப்படாது ஆஸ்பத்திரியில் இருந்த சடலம் நல்லான் செல்லையா (37) அரியாலை என உறவினர்களால் நேற்று அடையாளம் காட்டப்பட்டது.

(86)

சினைப்பர்

யில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் வேலை செய்துகொண்டிருந்த போதே விடுதலைப் புலிகள் இவர்கள் மீது சினைப்பர் தாக்குதலை நடாத்தினர்.

கடற்படை ரோந்து அதிகரிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் கடந்த இரண்டு தினங்களாக இரவு யகலாக நடைபெற்று வருகின்றது.

வெற்றிலைக்கேணிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் ரோந்துச் சேவைகள் அதிகரித்துள்ளன. ரோந்து செல்லும் கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு பொலிகண்டிப் பகுதியில் பலத்தபீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர். (யோ)

ஊழியர்

நிறைசேரிக்கு நேற்றுவழங்கிய பணிப்பில் இம்மாத முடிவுக்கு முன்சம்பள அதிகரிப்பை முழுமையாக வழங்கும்படி பணித்துள்ளார். அரச ஊழியருக்கான சம்பளஅதிகரிப்பை வழங்க போதுமான நிதியை பெற்றுக்கொள்ள நிறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

11-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10572

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-1658, 43-3576.

12-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10580

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-9579, 24-7340, 24-5967, 27-5406, 27-4020, 24-5036, 24-5774, 26-8565, 42-6226.

அனுதாபச்செய்தி

எமது நிறுவனத்திலும், எமது அங்கத்துவ சங்கங்களிலும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு சு. வாமதேவன் அவர்களின் அன்புத்தாயார் திருமதி சு. தங்கம்மா அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

தெ. ப. பொ. கூ. துறையின்

(கி/7187) சங்கங்கள். கொத்தணிகள். சமாசம்.

மரண அறிவித்தல்

திரு. சீமான் - சுவக்கீன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சீமான் - சுவக்கீன் 12.08.93 இல் நித்திய வீட்டிற்குள் பிரவேசித்து விட்டார். இவர் சீமான் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சு. மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெனிவராஜ் (கனடா), பொனிராஜ் (கனடா), திருமதி கு. யஸ்அனிஏஞ்சல் (ஆசிரியை சங்கானை ஆ மி. த. க. பாடசாலை), திருமதி ப. கனிபொளின் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற திருமதி பீற்றர், எலிசேனியாகுணமணி, அந்தோனிப்பிள்ளை-தங்கராசம் (வட்டக்கச்சி), அக்கினேஸ் (விசுவமடு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், E. பஸில்லெரயிஸ் (பிரான்ஸ்), த. குலதாஸ் (ஆசிரியர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்), திருமதி ஜெ. மொறின்வின்டா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டில்சான், ரொட்னிநிர்மல் (கனடா), செல்டா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 13-08-93 இன்று 11மணிக்கு ஆராதனைக்காக சங்கானை சலேசியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு கரைச்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சந்தைவீதி, சங்கானை.

த. குலதாஸ் (ஆசிரியர்)
(மருமகன்)

(5682)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'சுழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.